# செயலாற்றுகை அறிக்கை
# 2024

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

"சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்லை.

வெளியீடு

கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு

## குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் ஆசிச்செய்தி



இலங்கையின் அபிவிருத்திச் செயன்முறைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம் ஆசியாவின் பொருளாதார மற்றும் நிதி மையமாக இலங்கையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட "பலம்மிக்க எதிர்காலத்திற்கான முன்னுரை" என்ற கருப்பொருளைக் கொண்ட அரசாங்கத்தின் கொள்கையுடன் முன்னோக்கிப் பயணிப்பதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

பிராந்தியத்தில் முன்னணி குடிவரவு மற்றும் குடியகல்வு சேவையாக மாறுவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிவரும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், நிலவிய சவால்மிக்க சூழலிலும்கூட, 2024 ஆம் ஆண்டில் அடைந்த சாதனைகளைக் குறிப்பிட்டு, 2024 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்க கிடைத்ததை பாக்கியமாகக் கருதுகின்றேன்.

அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க, சுற்றுலாப் பயணிகளுடன் நட்புறவுமிக்க நடைமுறையைப் பின்பற்றி சுற்றுலா வீசாக்களை வழங்குவது நாட்டிற்கு அந்நியச் செலாவணியைக் கொண்டுவருவதற்கான ஒரு முக்கிய வழியாக காணப்படுவதோடு, இலங்கைப் பொருளாதாரத்திற்கு நேரடி டொலர் வருமானத்தை ஈட்டித் தரும் செயன்முறையாகவும் காணப்படுகின்றது. முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஈர்ப்பதற்காக நீண்டகால வதிவிட வீசாக்களை வழங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலமும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலமும் குடிவரவு மற்றும் குடியகல்வுச் செயன்முறையை சீராக்கும் பொருட்டு 07 நாடுகளுக்கு இலவச சுற்றுலா வீசாக்களை வழங்கியமை ஒரு சாதனையாகக் குறிப்பிடலாம். மேலும், 1994 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்ட இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்வழிப் போக்குவரத்துச் சேவை, இந்தியாவின் நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு அதிகரித்தமையானது எல்லைக் கட்டுப்பாட்டு முறைமையில் அடையப்பெற்ற விசேட வெற்றியாக குறிப்பிட முடியும். அவ்வாறே, கொழும்பு துறைமுக நகர வளாகத்திற்குள் குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான திட்டங்கள் 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், பயணிகளை அனுமதிக்கும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் உள்ள பயணிகளை அனுமதிக்கும் கருமபீடங்களில் தானியங்கி பயணிகள் அனுமதிக்கும் வாயில்களை (e-gates ) அறிமுகப்படுத்தும் கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகள் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. துறைமுக சேவைகளை மேலும் விரிவுபடுத்தி பயணிகளை அனுமதிக்கும் நடவடிக்கைகள் மற்றும் கப்பல் பணியாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கடற்பரப்பில் பயணிகளை அனுமதிக்கும் நடவடிக்கைகள் (on-board passenger Clearance ) தொடர்ச்சியாகவும் முறையாகவும் மேற்கொள்ளப்படு கின்றன. அவ்வாறே எதிர்காலத்தில் சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடவுச்சீட்டாக இலத்திரனியல் கடவுச்சீட்டை (e - passport ) வழங்குவதற்கு 2024 ஆம் ஆண்டில் கொள்முதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டில் கால்பதித்துள்ள நாம் எமது தொலைநோக்கு, செயற்பணி மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எமக்கு வழிகாட்டிய அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சின் செயலாளர், அத்துடன் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் உட்பட அனைத்து அரசாங்க நிறுவனங்கள், வெளிநாட்டு தூதரக சேவையின் உத்தியோகத்தர்கள், அனைத்து சர்வதேச அமைப்புகள் மற்றும் சேவைப் பெறுநர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அத்தோடு, விசேடமாக பொதுமக்களுக்கு தொடர்ச்சியான சேவையை வழங்கி, 38.01 பில்லியன் ரூபா தொகையை தேசிய வருமானத்திற்கு ஈட்டிக்கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் அயராது உழைத்த குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் ஒட்டுமொத்த பணியாளர்கள் அனைவரையும் பாராட்டுவதற்கு இதனை சந்தர்ப்பமாகக் கருதுகின்றேன்.

**ஐ. சமிந்த பத்திராஜ**

கட்டுப்பாட்டாளர் நாயகம் (பதில் கடமை)
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
சுஹுருபாய,
பத்தரமுல்லை.

## - உள்ளடக்கம் -

பக்கம்

**அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விபரம்** 01

1.1 அறிமுகம் 01
1.2 நோக்கு, செயற்பணி, நிறுவனத்தின் குறிக்கோள்கள் 02
1.3 பிரதான பணிகள் 02
1.4 நிறுவனக் கட்டமைப்பு 03
1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் மற்றும் கிளைகள் 04

1.5.1 நிர்வாகப் பிரிவு 05
1.5.1.1 நிர்வாகக் கிளை 05
1.5.1.2 பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை 05
1.5.1.3 கொள்முதல் கிளை 06
1.5.1.4 போக்குவரத்துக் கிளை 06
1.5.1.5 நலன்புரி அலகு 06
1.5.1.6 பொதுமக்கள் தகவல் அலகு 06
1.5.1.7 வரவேற்பு கருமபீடம் 06
1.5.1.8 பியஸ வளாகம் 06

1.5.2 கடவுச் சீட்டுப் பிரிவு 07
1.5.2.1 கடவுச்சீட்டுக் கிளை 07
1.5.2.2 கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை 07
1.5.2.3 கடவுச்சீட்டு திருத்தும் கிளை 08
1.5.2.4 வெளிநாட்டு தூதரகக் கிளை 08
1.5.2.5 தபால் கிளை 09
1.5.2.6 பிராந்திய அலுவலகங்கள் 09

1.5.3 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு 09
1.5.3.1 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை 09
1.5.3.2 இந்திய - இலங்கை பிரஜைகள் கிளை 10
1.5.3.3 சட்டக் கிளை 10

1.5.4 வீசா பிரிவு 11
1.5.5 புலனாய்வு மற்றும் செயற்படுத்தல் பிரிவு 14
1.5.6 தகவல் தொழில்நுட்பம் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு 17
1.5.6.1 இறங்கு துறைகள் கிளை 18
1.5.7 குடியுரிமைப் பிரிவு 20
1.5.8 நிதிப் பிரிவு 20
1.5.9 உள்ளக கணக்காய்வுப் பிரிவு 20

**அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்** 23

2.1 2024 ஆம் ஆண்டில் அடையப் பெற்ற முன்னேற்றம் 23

2.2 செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் வருமான உழைப்பின் முன்னேற்றம் 70

2.3 விசேட வெற்றிகள் 74

2.4 சவால்கள் 74

2.5 எதிர்கால இலக்குகள் 74

**அத்தியாயம் 03 - 2024, திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை** 76

**அத்தியாயம் 04 - குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்** 90

**அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG ) அடைவதற்கான செயலாற்றுகை** 93

**அத்தியாயம் 06 - மனித வள விபரம்** 96

**அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை** 108

- பின்னிணைப்பு

பின்னிணைப்பு 01 – கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

# அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விபரம்

## 1.1 அறிமுகம்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தினாலும் அதனோடு தொடர்புடைய திருத்தங்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்திற்கு அமைய ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய திருத்தங்களினாலும் குடியுரிமையை வழங்கும் சட்ட ஏற்பாடுகளினாலும் உரித்தாக்கப்பட்டுள்ள சட்டத் தத்துவங்களின் கீழ் இயங்கி வருகின்றது.

தேசியப் பாதுகாப்பை உறுதிசெய்த வண்ணம் இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர் இலங்கைக்குள் உட்பிரவேசிப்ப தையும் நாட்டிலிருந்து வெளியேறுவதையும் கட்டுப்படுத்தல், ஒழுங்குமுறைப்படுத்தல், வெளிநாட்டவர்களுக்கு வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல், வெளிநாட்டில் இலங்கையரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்குதல், வெளிநாடுகளில் பிறக்கும் இலங்கைப் பிரஜைகளின் பிள்ளைகளுக்கு இந்நாட்டுக் குடியுரிமையை வழங்குதல், இலங்கையின் குடியுரிமைக்காக விண்ணப்பிக்கும் ஆட்களுக்கு இந்நாட்டுக் குடியுரிமையை வழங்குதல் முதலான பிரதான பணிகள் இத்திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றன. அத்தோடு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேவைப் பெறுநர்களுக்கு மிகவும் வினைத்திறன்மிக்க நட்புறவுடன் கூடிய சேவையை வழங்குவதற்காக பணியாட் தொகுதியினர் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நாட்டுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் பாரிய பணியில் ஈடுபட்டுவரும் திணைக்களமாகும். அவ்வாறே, 2024 ஆம் ஆண்டு இலங்கையர்கள் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் போக்கு துரிதமாக அதிகரித்த ஆண்டாக குறிப்பிட முடியும். கொவிட் பெருந்தொற்று மற்றும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் ஏனைய அரச நிறுவனங்கள் சில வரையறைகளுடன் சேவைகளை வழங்கிய போதிலும் இந்தத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம், பிராந்திய அலுவலகங்கள், விமான நிலையங்கள் மற்றும் துறைமுக அலுவலகங்கள் தொடர்ச்சியாக பொதுமக்களின் சேவைகளுக்காக திறக்கப்பட்டிருந்தன. அதன் பெறுபேறாக 2024 ஆம் ஆண்டில் 38.01 பில்லியன் ரூபா தொகையை தேசிய வருமானத்திற்கு ஈட்டிக்கொடுப்பதற்கு இயலுமாகியது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 11.2% அதிகரிப்பாகும்.

### சட்டத் தத்துவங்கள்

- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு.
- 1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டமும் அதற்கான திருத்தங்களும்.
- 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டமும் அதற்கான திருத்தங்களும்.
- 1949 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இந்தியா மற்றும் பாகிஸ்தான் குடியிருப்பாளர்களின் குடியுரிமை தொடர்பான சட்டம்.
- 1956 குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் ஒழுங்குவிதிகளும் அதற்கான திருத்தங்களும்.
- 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இந்திய – இலங்கை உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டமும் அதற்கான திருத்தங்களும்.
- 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க நாடற்றோருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்.
- 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்.
- 2008 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சீன வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம்.
- மேற்குறிப்பிடப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளும் கட்டளைகளும்.
- குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளும் அறிவுறுத்தல்களும்.

## 1.2 நோக்கு, செயற்பணி மற்றும் நிறுவனத்தின் குறிக்கோள்கள்

**நோக்கு**

பிராந்தியத்தில் முன்னோடி குடிவரவு மற்றும் குடியகல்வு சேவையாகத் திகழ்தல்

**செயற்பணி**

தேசியப் பாதுகாப்பையும் சமூக விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்தல், பொருளாதார அபிவிருத்திற்கான வாய்ப்புகளை வழங்கிய வண்ணம் நாட்டிலிருந்து வெளியேறுவோரையும் நாட்டிற்குள் வருவோரையும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் குடியுரிமை சேவைகளை வழங்குதல்.

### குறிக்கோள்கள்

- தேசிய பாதுகாப்பு விடயத்தில் பிரதான தரப்பொன்றாக செயற்படுதல்.
- சர்வதேச தரநியமங்களின் பிரகாரம் பெயர் குறிக்கப்பட்ட இறங்கு துறைகள் ஊடாக சட்ட ரீதியாக நாட்டிற்குள் பிரவேசிப்பதையும் நாட்டிலிருந்து வெளியேறுவதையும் வினைத்திறன்மிக்க வகையில் முகாமை செய்தல்.
- இலங்கையரின் அடையாளத்தை வெளிநாடுகளில் உறுதிப்படுத்தல்.
- சேவை பெறுநர்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்குவதனூடாக அரசாங்கத் துறையில் மிகச் சிறந்த நிறுவனமாகத் திகழ்தல்.

## 1.3 பிரதான பணிகள்

- இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர் இலங்கைக்குள் உட்பிரவேசிப்பத்தைக் கட்டுப்படுத்தல், இலங்கையிலிருந்து வெளியேறுவதை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் இலங்கைப் பிரஜைகள் அல்லாத விரும்பத்தகாத ஆட்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுதல்.
- இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச்சீட்டுக்களை விநியோகித்தல்.
- வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல்.
- இலங்கைக் குடியுரிமையை வழங்குதல் மற்றும் இடைநேர்விளைவான செயற்பாடுகள்.
- இரட்டைக் குடியுரிமையை வழங்குதல் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான செயற்பாடுகள்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு



## 1.5 திணைக்களத்தின் கீழ் இயங்கும் பிரதான பிரிவுகளும் கிளைகளும்

### 01. நிர்வாகப் பிரிவு

- நிர்வாகக் கிளை
- பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை
- கொள்முதல் கிளை
- போக்குவரத்துக் கிளை
- நலன்புரிக் கிளை
- பொதுமக்கள் தகவல் அலகு
- வரவேற்பு கருமபீடம்
- பியஸ வளாகம்

### 02. கடவுச்சீட்டுப் பிரிவு

- கடவுச்சீட்டுக் கிளை
- கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை
- கடவுச்சீட்டு திருத்தும் கிளை
- வெளிநாட்டு தூதரகக் கிளை
- தபால் கிளை
- பிராந்திய அலுவலகங்கள்

### 03. கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு

- கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை
- இந்திய இலங்கைப் பிரஜைகள் கிளை
- சட்டக் கிளை

### 04. வீசா பிரிவு

- வீசா கிளை

### 05. தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு

- இறங்குதுறைகள் கிளை

### 06. செயற்பாட்டு மற்றும் புலனாய்வுப் பிரிவு

### 07. நிதிப் பிரிவு

### 08. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

### 09. குடியுரிமைப் பிரிவு

## 1.5.1 நிருவாகப் பிரிவு

திணைக்களத்தின் பொது நிர்வாகம், மனிதவள மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம், வாகனப் பராமரிப்பு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், கொள்முதல் நடவடிக்கைகள், திணைக்களத்திற்குரிய பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய பணிகளுடன் தொடர்புடைய காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, திணைக்களத்தின் உள்ளக மற்றும் வெளிப் பிரிவுகளுடன் சிறந்த ஒருங்கிணைப்பையும் முகாமைத்துவத்தையும் பேணி வருவதும் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அப்பணிகள் பின்வரும் கிளைகள் மற்றும் அலகுகள் ஊடாக நடைமுறைப்படுத்தப் படுகின்றன. இந்த அனைத்து நடவடிக்கைகளும் கட்டுப்பாட்டாளர் (நிர்வாகம்) அவர்களினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

1. நிருவாகக் கிளை
2. பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை
3. கொள்முதல் கிளை
4. போக்குவரத்துக் கிளை
5. நலன்புரி அலகு
6. பொதுமக்கள் தகவல் அலகு
7. வரவேற்பு கருமபீடம்
8. பியஸ வளாகம்

### 1.5.1.1 நிருவாகக் கிளை

இந்தப் பிரிவினால் திணைக்களத்தின் பொது நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, மனிதவள மற்றும் பௌதீகவள முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம் என்பன இப்பிரிவின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன.

### 1.5.1.2 பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கிளை

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் ஒட்டுமொத்த பணிக் கடமைகளை நிறைவேற்றும் போது கடந்த கால அனுபவங்கள், ஆக்கபூர்வமான நடைமுறைகள், நெறிமுறைசார் அமைப்புகளின் தரம் மற்றும் அளவு மற்றும் துறையில் சமூக, பொருளாதார, அரசியல், சட்டரீதியான மற்றும் தொழில்நுட்ப விரிவாக்கங்கள் மற்றும் புத்தாக்கங்ளுக்கு கவனம் செலுத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்வது இப்பிரிவின் பிரதான பணியாகும்.

மேலும், தேசிய மற்றும் சர்வதேச அளவில் எழக்கூடிய புத்தாக்க மற்றும் பரந்த மாற்றங்கள் மற்றும் அவற்றினால் தோற்றம்பெற முடியுமான தொழில்சார் அழுத்தம் மற்றும் சவால்களுக்கு ஏற்றவாறு, தற்போதைய ஆளணி மற்றும் பணிக் கடமைகளின் விரிவாக்கத்திற்கு அமைவாக புதிதாக இணையும் புதிய மனித உறவுகளை தற்போதுள்ள மற்றும் அடைந்துகொள்ள முடியுமான சந்தர்ப்பங்களில் உரிய முறையில் நிர்வகிப்பதன் மூலம் மனிதவள அபிவிருத்தி மற்றும் செயலாற்றுகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் கீழுள்ள கடப்பாடாகும்.

அந்த நோக்கத்திற்காக அரசாங்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் பயனுள்ள, ஊக்கமளிக்கும், செயல்திறன்மிக்க குழுவை உருவாக்குவதற்கு மிகவும் பொருத்தமான காலத்துக்கேற்ற பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை அடையாளம் காணல், திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை மதிப்பீடு செய்தல் என்பன இந்தப் பிரிவின் பரந்த நோக்கங்களாகும்.

பல்வேறுபட்ட வரையறைகள் மற்றும் எழுந்த அவசர மற்றும் எதிர்பாரா நடவடிக்கை முறைகளைக் கொண்ட சூழலில் பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வரும் அட்டவணையில் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை – 53 ஆகும்.

அதன் மூலம், பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் 6 ஆம் அத்தியாயத்தில் அட்டவணை 6.3 இன் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.5.1.3 கொள்முதல் கிளை

திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளின் கோரிக்கைக்கு அமையவும் திணைக்களத்தின் செயல் திட்டத்திற்கு இணங்கவும், திணைக்களத்திற்குத் தேவையான பணிகள், பொருட்கள் மற்றும் சேவைகளை தரத்துடன் (அரசாங்க கொள்முதல் செயல்முறைக்கு ஏற்ப) குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது இந்தப் பிரிவின் கடமைப்பொறுப்பு என சுருக்கமாக குறிப்பிட முடியும்.

அதற்கமைய இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு,

- ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்ட செயல் திட்டமொன்றுக்கு அமைய அந்த வருடத்திற்குரிய கொள்முதல் திட்டத்தையும் விரிவான கொள்முதல் திட்டத்தையும் தயாரித்தல்.
- அந்தக் கொள்முதல் திட்டத்திற்கு அமைய கொள்முதல் செய்யவேண்டிய பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வருடாந்த செயல் திட்டத்திற்கு அமைய கொள்வனவு செய்ய வேண்டிய பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.
- காலாண்டு / வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
- 2016 இல. 12 தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடைய நடவடிக்கைகள் மற்றும் வழங்குநர்களின் செயலாற்றுகை, மேற்பார்வை எனும் பிரதான கடமைகளை மேற்கொள்ளல்.

### 1.5.1.4 போக்குவரத்துக் கிளை

இந்தக் கிளையின் மூலம் பிரதான அலுவலகத்தின் மற்றும் நாடு பூராகவும் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்களுக்கு மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை கடமைகளில் ஈடுபடுத்துவதற்கும் நாட்டின் எல்லையை மீறி நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை கைதுசெய்வதற்கும் தேவையான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைத்துச்செல்வதற்கும் இரவுநேரப் பணிகளில் ஈடுபடும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களை வீடுகளுக்கு அழைத்துச்செல்லும் பொருட்டு போக்குவரத்து வசதிகள் செய்யப்படுகின்றன. இந்தத் திணைக்களம் வசம் உள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 34 ஆகும்.

### 1.5.1.5 நலன்புரி அலகு

1060 பேரைக் கொண்ட ஆளணியுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள நலன்புரிச் சங்கத்தினால் அதன் அங்கத்தவர்களினதும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களினதும் அதே போன்று திணைக்களத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ள வரும் பொதுமக்களினதும் வெளிச் சமூகத்தினதும் நலன்கருதி பல்வேறுபட்ட சமய, சமூக மற்றும் கலாசார நிகழ்ச்சிகளை நடத்தப்படுகின்றன. அதன் மூலம் உடல் மற்றும் உள ரீதியில் ஆரோக்கியமான மற்றும் திருப்தியுள்ள ஆட்களை உருவாக்குவதன் மூலம் பொதுமக்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவையை பொதுமக்களுக்கு வழங்குவது நலன்புரிச் சங்கத்தின் நோக்கமாகும்.

### 1.5.1.6 பொது மக்கள் தகவல் அலகு

1962 எனும் தொலைபேசி இலக்கத்தின் கீழான பொதுமக்கள் தகவல் அலகு திணைக்களத்தின் ஐந்தாம் மாடியில் நிறுவப்பட்டுள்ளது. திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ள முடியுமான சேவைகள் பற்றிய அனைத்து தகவல்களையும் இந்த அலகினால் பெற்றுக்கொள்ள முடியும்.

### 1.5.1.7 வரவேற்பு கருமபீடம்

திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகைத்தரும் பொதுமக்களை இன்முகத்துடன் வரவேற்று உரிய பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.5.1.8 பியஸ வளாகம்

திணைக்களத்திற்கு வருகைத்தரும் பொதுமக்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல், விண்ணப்பங்களை ஒப்படைக்கும் வரையில் தரித்திருத்தல் மற்றும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக தனது சந்தர்ப்பம் வரும் வரையில் தங்கியிருப்பதற்காக பியஸ வளாகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேலும் கடவுச்சீட்டு மற்றும் வீசாவுக்கான புகைப்படம் எடுத்தல் மற்றும் விண்ணப்பங்களை நிரப்புவதற்கான உதவிச் சேவை, தொடர்பாடல் வசதிகள் மற்றும் உணவக வசதி என்பனவும் அங்கு காணப்படுகின்றன.

## 1.5.2 கடவுச்சீட்டுப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கிவரும் இப்பிரிவானது பொது மக்களுக்கு மிகவும் நெருங்கிய பிரிவாகும். இலங்கையர்களுக்கு தங்கு தடையின்றி வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கும் தங்கியிருப்பதற்கும் திரும்பி வருவதற்கும் ஏற்றவாறு சர்வதேச தரநியமங்களுடன் கூடிய கடவுச்சீட்டு விநியோகிக்கப் படுகின்றது. கடவுச்சீட்டுக்கள் ஒருநாள் சேவை, சாதாரண சேவை என்ற அடிப்படையில் விநியோகிக்கப்படுகின்றன. இந்த சேவைகள் பிரதான அலுவலகத்தினாலும் பிராந்திய அலுவலகங்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

### நோக்கங்களும் செயற்பாடுகளும்

01. சரியான மற்றும் உண்மையான தகவல்கள் அடங்கிய கடவுச்சீட்டை இலங்கையர்களுக்கு வழங்கும் பொருட்டு வழிமுறைகளைப் பின்பற்றுதல்.
02. இலங்கையின் கடவுச்சீட்டினது தரத்தை பாதுகாப்பதற்கும் விருத்திசெய்வதற்கும் ஏற்புடைய கொள்கைகளை அமுல்படுத்தல்.
03. இலங்கையர்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகள் தொடர்பிலான நீதிமன்ற உத்தரவுகளை அமுல்படுத்தல்.
04. இலங்கையர்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய அரச பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் அரச நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்படுதல்.

இந்தப் பிரிவின் செயற்பாடுகள் அதன் 5 கிளைகள் ஊடாகவும் பிராந்திய அலுவலகங்கள் 4 ஊடாகவும் செயற்படுத்தப்படுகின்றன. அதாவது,

- கடவுச் சீட்டுக் கிளை
- கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை
- கடவுச்சீட்டு திருத்தக் கிளை
- வெளிநாட்டு தூதரகக் கிளை
- தபால் கிளை
- பிராந்திய அலுவலகங்கள் – கண்டி, மாத்தறை, குருநாகல், வவுனியா

### 1.5.2.1 கடவுச் சீட்டுக் கிளை

நாளாந்தம் அதிக எண்ணிக்கையிலான சேவைப் பெறுநர்கள் வருகைத் தரும் கிளை இதுவாகும். பொதுமக்களுக்கு நெருக்கமான வினைத்திறன்மிக்க மற்றும் துரித சேவைகளை வழங்கும் நோக்கில் சாதாரண சேவை மற்றும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்காக கண்டி, மாத்தறை, வவுனியா மற்றும் குருநாகல் மாவட்டங்களில் 4 பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில் கடவுச்சீட்டு தயாரிப்புக்கான கேள்வி அதிகரித்த காரணத்தினால் பொதுமக்களுக்கு உச்ச அளவில் சேவை வழங்கும் நோக்கில் 2023.06.15 ஆம் திகதி முதல் இணைய வழியில் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 1.5.2.2 கடவுச்சீட்டு தயாரிப்புக் கிளை

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இப்பிரிவு இயங்கிவருகின்றது.

கடவுச்சீட்டுக் கிளையிடமிருந்தும் வெளிநாட்டுத் தூதரகக் கிளையிடமிருந்தும் புதிய கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்ப தற்காக இக்கிளைக்கு கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் உரிய பரீட்சித்தல்களுக்கு உட்படுத்தப்பட்டதன் பின் பின்வருமாறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தரவுகளைப் பதிதல் (Data Entry), அத்தரவுகளை மீண்டும் பரீட்சித்தல் (Validate), விண்ணப்பதாரியின் புகைப் படத்தையும் கையொப்பத்தையும் வருடி எடுத்தல் (Capture), அச்சிடுதல் (Print), அச்சிடப்பட்ட கடவுச்சீட்டுகளில்

மாற்றங்கள், அவதானிப்புக்கள் இருப்பின் அவற்றை 4 ஆம் பக்கத்தில் அச்சிடுதல் (Observation Print), தரக் கட்டுப்பாடு (Quality Assurance), கடவுச்சீட்டுகளை லெமினேட்டிங் செய்தல், பரீட்சித்தல், ஒப்பிட்டுப் பார்த்தலும் 4 ஆம் பக்கத்தை வருடி எடுத்தல் (Compare & 4th Page Scan), இறுதி தரப் பரிசோதனை (Quality Confirm) மற்றும் (Supervisor Quality Confirm) செய்து அதன் அச்சு அறிக்கையுடன் ஒருநாள் சேவையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுக்கள், கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படும் கருமபீடங்களுக்கும் சாதாரண சேவையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுக்கள் தபால் கிளைக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்ப வேண்டிய கடவுச்சீட்டுக்கள் வெளிநாட்டுத் தூதரகக் கிளைக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக கடவுச்சீட்டு திருத்தங்களுக்காக கடவுச்சீட்டு திருத்தக் கிளையினால் அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் உரிய பரீட்சித்தல்களின் பின்னர் தரவுகளைப் பதிதல் (Data Entry), அத்தரவுகளை மீண்டும் பரீட்சித்தல் (Validate), திருத்தங்களை 4 ஆம் பக்கத்தில் அச்சிடுதல் (Observation Print ) போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தச் செயன்முறைக்கு மேலதிகமாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இணைய வழியில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு கடவுச்சீட்டு அச்சிடும் செயன்முறையின் போது விண்ணப்பங்களைப் பரிசோதித்தல், அதற்குரிய பார் குறியீட்டுடன் கூடிய இலக்கத்தை அச்சிடுதல், கடவுச்சீட்டை அச்சிடல் உள்ளிட்ட அனைத்து கட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.5.2.3 கடவுச்சீட்டு திருத்தக் கிளை

கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இப்பிரிவு இயங்கிவருகின்றது. விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுகளில் கடவுச்சீட்டு உரிமையாளர்களினால் பின்னர் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு பல்வேறு வகைகளின் கீழ் கடவுச்சீட்டுகளில் திருத்தங்களை உள்ளடக்கும் நடவடிக்கைகள் இந்தக் கிளையினால் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒரு திருத்தத்திற்கு ரூ. 1200/- தொகை அறவிடப்படுகின்றது. சிறாப்பர் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரும் கணினிப் பிரிவின் மூன்று உத்தியோகத்தர்களின் உதவியுடன் ஒரு மணித்தியாலத்திற்குள் திருத்தப்பட்ட கடவுச்சீட்டு சேவைப் பெறுநருக்கு வழங்கப்படும்.

இந்தப் பிரிவின் பணிகள் பின்வருமாறு.

- முதற்பெயர் / வேறு பெயர்கள் திருத்தம்
- திருமணத்திற்கு முன்னரான பெயரை உள்ளடக்குதல்
- திருமணத்திற்குப் பின்னரான பெயரை உள்ளடக்குதல்
- பதவியை உள்ளடக்குதல் / பதவியை நீக்குதல்
- தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குதல்
- ஒரு வெளிநாட்டுப் பயணத்திற்கு வரையறுத்தல்
- ஒருவழிப் பயணத்தை இரத்துச் செய்தல்
- பிறந்த இடத்தை திருத்துதல்
- இரட்டைக் குடியுரிமையை உள்ளடக்குதல்
- செல்லுபடி காலத்திற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நீக்குதல்

### 1.5.2.4 வெளிநாட்டுத் தூதரகக் கிளை

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கான கடவுச்சீட்டுக்கள் இந்தக் கிளையினால் விநியோகிக்கப்படுகின்றன. குறித்த நாட்டில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதரகத்தினூடாக சமர்ப்பிக்கப்படும் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஊடாக இந்தத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவ்வாறு அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்களுக்கான புதிய கடவுச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு மீண்டும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டு வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதரங்களூடாக உரிய விண்ணப்பதாரிகளிடம் சேர்ப்பிக்கப்படுகின்றன.

வெளிநாட்டு தூரக கிளையின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்

- வெளிநாட்டு தூதரகங்களிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு கடவுச்சீட்டுக்களை விநியோகித்தல்
- வெளிநாட்டு தூதரகங்களில் இருந்து வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு தற்காலிக கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கு அனுமதி அளித்தல்.
- வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் கடவுச்சீட்டு விபரங்களைத் திருத்துவதற்கு அனுமதி வழங்குதல்.
- வெளிநாட்டு தூதரகங்கள் கோரும் போது, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் கடவுச்சீட்டுகளின் உண்மைத்தன்மையை சரிபார்த்தல் மற்றும் வெளிநாட்டு தூதரகங்கள் கோரும் போது கடவுச்சீட்டுக்கள் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல்.
- அரபு மொழியில் மொழிபெயர்த்த பின்னர் சான்றுப்படுத்தல்.
- உரிமையாளர்களை கண்டுபிடிக்க முடியாமல் திருப்பி அனுப்பப்படும் கடவுச்சீட்டுக்களை கணினி தரவுத்தளத்தில் உள்ளிட்டு அந்த அமைப்பை நிர்வகித்தல்.

### 1.5.2.5 தபால் கிளை

சாதாரண சேவையின் கீழ் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு தயாரிக்கப்படுகின்ற கடவுச்சீட்டுக்களை தாமதமின்றி பதிவுத் தபால் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைப்பதே இந்தப் பிரிவின் பிரதான பணியாகும்.

### 1.5.2.6 பிராந்திய அலுவலகங்கள்

மாத்தறை, கண்டி, வவுனியா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் அமைந்துள்ளதோடு, சாதாரண சேவை மற்றும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டு விநியோகம் மற்றும் கடவுச் சீட்டுக்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் பணிகள் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

## 1.5.3 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புப் பிரிவு

கட்டுப்பாட்டாளர் (கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு) / பிரதி ஆணையாளர் (இந்தியா – இலங்கை) அவர்களின் மேற்பார்வையின் கீழ் கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை, இந்திய – இலங்கைப் பிரஜைகள் கிளை, சட்டக் கிளை என்பன இயங்கி வருகின்றன.

### 1.5.3.1 கொள்கை, அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கிளை

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அபிவிருத்தி மற்றும் கொள்கை வகுப்பு நடவடிக்கைகளை நன்கு திட்டமிட்ட அடிப்படையில் சீராக அமுல் செய்யும் நோக்குடன் இந்தக் கிளை நிறுவப்பட்டுள்ளது.

**நிறைவேற்றப்படும் பிரதான பணிகள்**

1. திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுவதுடன் தொடர்புடைய கொள்கைகளை / திட்டங்களை வகுத்தல்.
2. திணைக்களத்திற்குரிய சட்டதிட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளல்.
3. உள்ளக சுற்றறிக்கைகள், நடவடிக்கை முறைகளைத் தயாரித்து வெளியிடுதல், வழிகாட்டல் கையேடுகளைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.
4. வருடாந்த செயல் திட்டத்தை (Action Plan) தயாரித்தல் மற்றும் அதை நடைமுறைப்படுத்த ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. கடந்த ஆண்டுக்குரிய செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்.
6. ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டிய மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் உரிய திகதியில் அந்த நிறுவனங்களுக்கு அனுப்புதல்.

7. நிரல் அமைச்சின் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் கொள்கை ரீதியான நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய கடமைகளை ஒருங்கிணைத்தல்.
8. திணைக்கள தேவைப்பாடுகளுக்கு அமைய அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்து, அதற்கு அமைச்சர வையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
9. பாராளுமன்றத்தில் வாய்மொழியாக பதில்களை எதிர்பார்த்து வினவப்படும் கேள்விகளுக்கு பதில்களைத் தயாரித்தல்.
10. திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் மூலதனக் கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு, ஒருங்கிணைப்பு, வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

### 2024 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட விசேட பணிகள்

- மூலதனக் கருத்திட்டங்களில் 61% முன்னேற்றத்தை நிறைவுசெய்வதற்குத் தேவையான தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இந்தத் திணைக்களத்தின் கீழ் பேணப்படும் இந்திய இலங்கை பிரஜைகள் கிளைக்கு ஏற்புடைய குடியுரிமை சான்றிதழ்களின் தகவல்கள் அடங்கிய ஆவணங்களை ஸ்கேனிங் செய்து முறையான தரவுத்தளம் ஒன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 1.5.3.2 இந்திய – இலங்கை பிரஜைகள் கிளை

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் பதவி வழியில் இந்திய வம்சாவளி மக்களை பதிவு செய்வதற்கான ஆணையாளர் பதவியை வகிப்பதுடன், கட்டுப்பாட்டாளர் (கொள்கை, அபிவிருத்தி, மறுசீரமைப்பு) பதவி வழியாக இந்திய வம்சாவளி மக்களை பதிவு செய்வதற்கான பிரதி ஆணையாளராக செயற்படுவார்.

1949 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இந்திய, பாகிஸ்தான் குடியிருப்பாளர்களின் குடியுரிமை தொடர்பான சட்டம், 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இந்திய – இலங்கை உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டம், 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க நாடற்றோருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம், 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் தகைமை பெறுவோருக்கு குறித்த சட்டம் அமுலுக்கு வந்த திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் இலங்கைக் குடியுரிமை உரித்தாகின்றது. இலங்கையில் வசிக்கும் இந்திய வம்சாவளி மக்களுக்கு குடியுரிமையை வழங்குவதும் அதனுடன் தொடர்புடைய பிற பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் சீன வம்சாவளி மக்களைப் பதிவுசெய்யும் 2008 இல 38 எனும் சீன வம்சாவளியுள்ளவர்ளுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்திற்கு அமைய பிரஜாவுரிமை வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற செயற்பாடுகளை இந்தப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

## 1.5.3.3 சட்டக் கிளை

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பணிகளுடன் தொடர்புடைய சட்ட திட்டங்களூடாக உரித்தாக்கப்பட்டுள்ள சட்டத் தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதன் மூலம் தேவைக்கு ஏற்றவாறு குறித்த சட்ட திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து திணைக்களத்தின் பணிகளை வினைத்திறனுடன் செவ்வனே நிறைவேற்றுவதற்கு இந்தக் கிளையூடாக ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

### சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள்:

I. கட்டுப்பாட்டாளர் நாயகம் அல்லது திணைக்களத்தின் வேறு உத்தியோகத்தரொருவர் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் வழக்குகளுக்கு ஏற்புடைய அவதானிப்புரைகளை வழங்குதல்.

II. கட்டுப்பாட்டாளர் நாயகம் அல்லது திணைக்களத்தின் வேறு உத்தியோகத்தரொருவர் நீதிமன்றத்தில் சாட்சியம் வழங்க அழைப்பாணை வழங்கப்பட்டிருக்குமிடத்து ஏற்புடைய தகவல்கள் மற்றும் கோவைகளைத் தயாரித்து

பொருத்தமான உத்தியோகத்தர்களை அன்றைய தினத்தில் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும் சாட்சியம் வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

III. நீதிமன்ற கட்டளைகளை நடைமுறைப்படுத்த முடியாத, தகவல்கள் பூரணமற்ற நீதிமன்றக் கட்டளைகள் தொடர்பில் அறிவூட்டல் கடிதங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஏற்புடைய நீதிமன்றங்களின் பதிவாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்**

I. இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச் சீட்டுக்களை வைத்திருப்பவர்களுக்காக இருதரப்பு வீசாக்களை விடுவிக்கும் உடன்படிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு பணிகளை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளல்.

II. திணைக்கள நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பணிகளுக்காக உள்நாட்டு நிறுவனங்களுடன் திணைக்களம் செய்துள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் அவதானிப்புரைகளைச் சமர்ப்பித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

III. மீள் அனுமதி உடன்படிக்கைகளை (re-admission) தயாரிப்பதற்குத் தேவையன உதவியை வழங்குதல் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளில் ஈடுபடல்.

V. திணைக்களப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான கட்டிடங்கள், வீடுகள் தொடர்பில் ஏற்புடைய தரப்புக்களுடன் மேற்கொள்ளும் குத்தகை ஒப்பந்தங்களைத் தயாரிப்பதற்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

V. திணைக்களம் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களுக்கு அவதானிப்புக்களை வழங்குதல், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளல்.

## 1.5.4 வீசா பிரிவு

கட்டுப்பாட்டாளர் (வீசா) அவர்களின் மேற்பார்வையின் கீழ் இந்தப் பிரிவு இயங்குகின்றது. வெளிநாட்டவர்களின் கடவுச்சீட்டுக்களுக்குரிய வீசா தொடர்பான பணிகள் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் (iii ) ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பிரஜை அல்லாதோர் இலங்கைக்குள் பிரவேசிப்பதை கட்டுப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்தச் சட்டத்திற்கு அமைய ஆக்கப்பட்ட 1956 குடிவரவு மற்றும் குடியகல்வு ஒழுங்கு விதிகளில் 02 தொடக்கம் 35 வரையிலான ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு இந்த நாட்டில் சட்டபூர்வமாகத் தங்கியிருப்பதற்கான வீசா அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் வீசா நீடிப்பு முதலான பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு வீசாக்களை விநியோகித்தல் மற்றும் நீடிப்புச் செய்வதன் மூலம் நாட்டுக்கு போதியளவு வருமானத்தை ஈட்டிக் கொடுத்தல் மற்றும் அத்தியாவசிய துறைகளில் சேவையில் ஈடுபடுவதற்கு வசதிகளைச் செய்வதன் மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் மற்றும் நாட்டுக்கு சாதகமான வீசா கொள்கைகளை அமுல் செய்தல் என்பன இந்தக் கிளையின் பிரதான நோக்கங்களாகும்.

மேற்கூறப்பட்ட குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டம் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு இணங்க, இந்த நாட்டிற்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு வதிவிட / குடியிருப்பு வீசா மற்றும் வதிவு அல்லாத வீசா ஆகிய இரண்டு முக்கிய வீசா வகைகளின் கீழ் இந்தத் திணைக்களத்தினால் வீசாக்கள் வழங்கப்படுகின்றன.

## வதிவிட வீசா / வசிப்பதற்கான வீசா (Resident Visa)

விசேட நோக்கங்களுக்காக இலங்கையில் நீண்ட காலம் வசிப்பதற்கு உத்தேசிக்கும் பின்வரும் தொகுதிகளைக் கொண்ட இலங்கையர் அல்லாதவர்களுக்கு இவ்வாறான வீசாக்கள் வழங்கப்படுகின்றன.

1. தொழில் புரிவோர்
    - முதலீட்டுச் சபையின் கீழ் கருத்திட்டங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளோர்.
    - அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள்
    - தனியார் கம்பனிகள் / அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களில் பணியாற்றும் ஊழியர்கள்
2. முதலீட்டாளர்கள்
    - இலங்கையில் நிதி மூலதனத்தை முதலிடுவோர்
    - இலங்கையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோர்
3. மத அலுவல்களுக்காக வருகை தருபவர்கள்
    - மத குருமார்
    - மத வழிபாட்டுத் தளங்களை நிர்மாணிப்பவர்கள் / பணிவிடை செய்பவர்கள்
4. மாணவர்கள்
    - பல்கலைக்கழக மாணவர்கள்
    - அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களின் மாணவர்கள்
5. 1967 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் உள்வாங்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட இந்தியர்கள்
6. முன்னாள் இலங்கையர்கள் மற்றும் அவர்களது தங்கி வாழ்வோர்
7. இலங்கையர் ஒருவரின் குடும்ப அங்கத்தவர்கள்
    - வெளிநாட்டு வாழ்க்கைத்துணை
    - வெளிநாட்டு தேசியத்தைக் கொண்ட பிள்ளைகள்
8. இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றுபவர்கள் மற்றும் அவர்களது தங்கி வாழ்வோர்
9. எனது கனவு வீடு வீசா (My Dream Home) நீடிப்பு மாத்திரம்
10. விருந்தினர் வீசா (Residence Guest Scheme) நீடிப்பு மாத்திரம்
11. மருத்துவக் காரணிகள் மீது தங்கியிருப்போர்
12. பொன் சுவர்க்க வீசா நிகழ்ச்சித்திட்டம் (Golden Paradise Visa Program)
13. கொழும்பு துறைமுக நகரம் (Colombo Port City )
14. நீதிமன்றங்களில் (Court ) ஆஜராவதற்கான வீசா

## வசிப்பதற்கு அல்லாத வீசா (Non - Resident Visa)

குறுகியகால தேவைகளுக்காக இந்த நாட்டுக்கு வருகைத்தருவதற்கு விநியோகிக்கப்படும் வீசா வகையாகும். அதனை வருகைத் தந்து அல்லது இணைய வழியில் பெற்றுக்கொள்ள முடியும். வருகைத்தரு வீசா சுற்றுலா மற்றும் வியாபாரம் என இரு வகைப்படும்.

## வருகைத்தரு வீசா (Visit Visa)

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் இலத்திரனியல் பயண அங்கீகாரத்தின் (ETA ) கீழ் சுற்றுலா மற்றும் வியாபார நோக்கங்களுக்காக குறுகியகால வீசா வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

### 1. சுற்றுலா நோக்கத்துக்கான வீசா

பின்வரும் செயற்பாடுகளுக்கு இலங்கையில் பயணம் செய்வதற்கு குறுகியகாலத்திற்கு வருகைத் தரும் வெளிநாட்டவர்களுக்கு இலத்திரனியல் பயண அனுமதியின் கீழ் 30 நாட்களுக்கான வீசா வழங்கப்படுகின்றது.

- MICE – சுற்றுலா நடவடிக்கைகள் – முதலீட்டு கருத்தரங்குகள் / கண்காட்சிகள் / நிகழ்ச்சிகள் / ஜம்போரி (TOURISM -Investors Conference/ Exhibitions/ Events/ Jamboree )
- ஆயுர்வேத மருத்துவ சிகிச்சைப் பெற்றுக்கொள்வதற்காக – ஹேர்பல் (Medical Treatment Including Ayurvedic (Herbal )
- கலை, சங்கீதம் மற்றும் நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்றல் (Participant in art Music and Dance Event)
- யாத்திரிகை / விளையாட்டு நிகழ்ச்சிகள் / திருமண வைபவங்களில் பங்கேற்றல் (Participant in Pilgrimages/ Sport Event/ Weddings)
- சுற்றுலா அல்லது விடுமுறையைக் கழித்தல் (Sightseeing or Holidaying)
- நண்பர்கள் மற்றும் உறவினர்களை தரிசித்தில் (Visiting Friends and Relatives)

## 2. குறுகியகால வியாபார நடவடிக்கைகளுக்கு (Business Visa)

இந்த வீசாக்கள் சுற்றுலா அல்லாத குறுகிய கால வணிக நோக்கங்களுக்காக இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதற்காக, தொடர்புடைய பணியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (உதாரணம். வர்த்தக கலந்துரையாடல்கள் / நிறுவன செயலமர்வுகள்) வணிக நோக்கங்களுக்காக வருகை தருபவர்களுக்கு ஒரு வருட வீசா வழங்கப்படுகிறது.

## 3. பலமுறை நுழைவு விசா - வணிகம் (Multiple Entry Visa Business)

இந்த வீசா ஒரு வருட காலத்திற்கு வணிக நோக்கத்திற்காக இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது, மேலும் இந்த வீசாவைப் பெற்று இலங்கையில் தங்குவதற்கான அதிகபட்ச காலம் 180 நாட்கள் ஆகும்.

## 4. இடைத்தங்கல் வீசா (Transit Visa)

இலங்கைக்கு வெளியே ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பயணம் செய்யும் போது இலங்கைக்குள் நுழைவதற்கு வழங்கப்படும் வீசா ஆகும். இது அதிகபட்சம் 2 நாட்களுக்கு உட்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றது.

## இடைத்தங்கல் வீசா

- இரண்டு நாட்களுக்கு இலங்கை வழியாக வேறொரு இடத்திற்கு பயணிக்கும் பயணிக்கு இலவசமாக இடைதங்கல் வீசா வழங்கப்படுகிறது.
- இலங்கை துறைமுகம் ஒன்றின் ஊடாக பயணிக்கும் கப்பலின் மூலம் இலங்கைக்கு 04 நாள் விஜயம் மேற்கொள்வதற்காக இடைத்தங்கல் வீசா வழங்குவதற்கு 25 USD கட்டணம் அறவிடப்படுகின்றது.
- இலங்கை கடற்பரப்பில் உள்ள கப்பலின் வணிகக் கடற்படைக் குழுவினர் 30 நாட்களுக்குக் கரைக்கு வருவதற்குக் கடற்கரை அனுமதி இலவசமாக வழங்கப்படும். அவர்கள் நீண்ட காலம் தங்கினால், மாதாந்த கட்டணமாக USD 25 செலுத்தி அடுத்த 02 மாதங்களுக்கு வீசாவை நீட்டிக்க முடியும். வருகைத் தந்த நாளிலிருந்து 03 மாதங்களுக்கு மேல் தங்கினால் உரிய கட்டணத்தைச் செலுத்திய பிறகு வீசாவிற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட வீசாக்களை வழங்குவது தேசியப் பாதுகாப்பு தொடர்பில் பரிசீலனைக்கு எடுக்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் வீசா வழங்கும் தற்போதைய முறையைப் பின்பற்றுதல் மற்றும் பாதுகாப்பு அனுமதி அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் அமைச்சரவையின் முடிவுகளின்படி வதிவிட வீசாவுக்கு சுகாதார அமைச்சின் சுகாதாரத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளல் என்பன தொடர்ந்தும் செயல்படும்.

### நிரந்தர வதிவிட விசா

- இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியாத இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற்றிருந்த நபர்களுக்கு இலங்கைப் பிரஜையின் வெளிநாட்டு வாழ்க்கைத் துணை மற்றும் வெளிநாட்டுப் பிள்ளைகளுக்கு நிரந்தர வதிவிட வீசா வழங்குவதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, மேற்படி முறைமைக்கு அமைய வீசா வழங்கும் செயன்முறையை மிக விரைவில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்படுகின்றது.

## 1.5.5. புலனாய்வு மற்றும் செயற்படுத்தல் கிளை

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டம் மற்றும் அதன் கீழ் ஆக்கப்பட்ட 1956 குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் ஒழுங்குவிதிகள் மற்றும் சர்வதேச சமவாயங்களுக்கு இணங்காத வெளிநாட்டவர்கள் மற்றும் நாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ள வெளிநாட்டவர்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர், பிரவேசிக்கும் போது மற்றும் இலங்கையில் தரித்திருக்கும் போது அத்தகைய வெளிநாட்டவர்களை அடையாளம் காணல், அவர்களின் செயற்பாடுகளை கண்காணித்தல், குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தை மீறி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை கைதுசெய்தல், தடுத்து வைத்தல், அவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுதல் அல்லது நாடுகடத்தல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல், மேற்கூறப்பட்ட குற்றங்களை தடுப்பதற்கு முனைப்புடன் செயற்படுதல் மற்றும் அதனோடு தொடர்புடைய சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் என்பன இந்தப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

இந்தக் கிளை 5 பிரிவுகளைக் கொண்டு இயங்குகின்றது.

1. புலனாய்வு அலகு (Investigation Unit)
2. தடுப்பு முகாம்கள் (DETENTION CENTERS)
3. ஆட்கடத்தலை தடுக்கும் தேசிய நிலையம் (NAHTRC - National Anti Human Trafficking Center )
4. இடர் மதிப்பீட்டு நிலையம் (RISK ASSESSMENT CENTER)
5. எல்லை கண்காணிப்பு அலகு (BORDER SURVEILLANCE UNIT )

## 1. புலனாய்வு அலகு (Investigation Unit)

குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறி இந்த நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை கைதுசெய்தல், தடுத்து வைத்தல் மற்றும் நாட்டிலிருந்து வெளியேற்றும் பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

I. வெளிக்கள கண்காணிப்பு
II. தொலைதூர கண்காணிப்பு

### I. வெளிக்கள கண்காணிப்பு மற்றும் புலனாய்வு

வெளிக்கள கண்காணிப்பின் கீழ், தகவல் மற்றும் முறைப்பாடுகளின் அடிப்படையில் தொடர்புடைய இடங்களுக்குச் சென்று, வெளிநாட்டினரின் கடவுச்சீட்டுகளைச் சரிபார்த்து, தேவையான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், நேரடி கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆண்டு வெளிக்கள கண்காணிப்பின் கீழ் நடத்தப்பட்ட மொத்த விசாரணைகளின் எண்ணிக்கை 1305 ஆகும், அவற்றில் 942 விசாரணைகள் மேலதிக நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

### II. தொலைதூர கண்காணிப்பு

தொலைதூர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக திணைக்களத்தின் தரவுத்தளத்தினூடாக தொலைதூர அடிப்படையிலான கண்காணிப்பு நடவடிக்கைகள் ஊடாக இலங்கையில் தங்கியிருக்கும் மற்றும் இலங்கைக்கு வருகைத்தரும் வெளிநாட்டவர்களின் சரியான தகவல்களை சேகரித்தல், தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக புலனாய்வுப் பிரினால் 2019 ஆம் ஆண்டில் தொலைதூர கண்காணிப்பு நடவடிக்கைகள்

ஆரம்பிக்கப்பட்டன. இந்தச் செயன்முறை ஊடாக சந்தேகத்திற்கிடமான வெளிநாட்டவர்களின் தகவல்கள் துப்பரியும் ஏட்டில் உள்ளடக்கப்படும்.

தொலைதூர கண்காணிப்பு செயன்முறையின் குறுகிய கால நோக்கங்கள்;

1. ஒழுங்கற்ற குடியேறிகளை அடையாளம் காணல்.
2. ஒழுங்கற்ற இடப்பெயர்வுக்கு உதவி ஒத்தாசைப் புரிபவர்களை அடையாளம் காணல்.
3. ஒழுங்கற்ற இடப்பெயர்வுக்கு உதவி ஒத்தாசைப் புரிபவர்களின் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

தொலைதூர செயன்முறையின் நீண்டகால நோக்கங்கள்;

1. விசா காலாவதியாகி நாட்டில் தங்குபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
2. விசா நிபந்தனைகளை மீறுவதைக் குறைத்தல்.
3. இலங்கைக்குள்ளும் இலங்கை ஊடாகவும் ஆட்கடத்தல் மற்றும் மனித கடத்தலைத் தடுத்தல்.
4. இலங்கைக்குள்ளும் இலங்கையின் ஊடாகவும் ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணல்.

வீசாவை நீடித்துக்கொள்ளாத காரணத்தினால் மனித வியாபாரத்திற்கு அல்லது ஆட்கடத்தலுக்கு உட்பட்டு பாதிக்கப்படுவதற்கு இடம்பாடுள்ள விசேடமாக வெளிநாட்டுப் பெண்களை அதிலிருந்து விடுவித்துக்கொள்வதற்கும் அதன் காரணத்தினால் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களை மீறுவதை விட்டும் அவர்களை தடுப்பதற்கும் இந்தச் செயன்முறை மூலம் இயலுமாகியுள்ளது.

## 2. வெளிநாட்டவர் தடுப்பு நிலையங்கள் (Detention Centers)

குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் மற்றும் இலங்கையில் பல்வேறுபட்ட குற்றங்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்களின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் அந்த வெளிநாட்டவர்களை இந்த நாட்டிலிருந்து அகற்றும் வரையில் தடுத்துவைத்தல் மற்றும் அது வரையில் அவர்களது அடிப்படையில் தேவைகளைப் பூர்த்திசெய்தல் மற்றும் தேவையான மருத்துவ சிகிச்சைகளுக்கு முன்னிலைப்படுத்தல் என்பன இந்த தடுப்பு நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய, தடுத்து வைத்துள்ளவர்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய தேவை ஏற்படும் போது, பணியில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர்களை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று, மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் மருத்துவமனையில் அனுமதித்தல். தேவையான போது மருத்துவ முகாம்களை நடத்துதல் மற்றும் மன்றில் ஆஜர்படுத்தல்.

தற்போது இந்த திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் தடுப்பு நிலையங்கள் இரண்டு காணப்படுகின்றன.

I. மிரிஹானை தடுப்பு முகாம்
II. வெலிசரை தடுப்பு முகாம்

இந்த வெளிநாட்டவர் தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள்:

01. புலனாய்வுப் பிரிவின் மூலம் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறியதன் காரணமாக கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்கள்
02. நீதிமன்றக் கட்டளையின் மீது நாட்டிலிருந்து நாடுகடத்துவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படும் வெளிநாட்டவர்கள்
03. குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறியதன் காரணமாக இலங்கை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட வெளிநாட்டவர்கள்
04. குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறி சுயமாக திணைக்களத்திற்கு ஆஜராகும் வெளிநாட்டவர்கள் ஆகியோர் உள்ளனர். அவர்களில் 23 ஆண்களும் 24 பெண்களும் அத்தோடு 57 சிறுவர்களும் உள்ளனர்.

## 3. ஆட்கடத்தலை கட்டுப்படுத்தும் தேசிய வள நிலையம் (NATIONAL ANTI HUMAN TRAFFICKING CENTER )

ஆட்கடத்தல் வியாபாரத்தை தடுக்கும் தேசிய வள நிலையம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கும் ஒரு அலகாகும். அதன் மூலம் நாட்டினுள் இருக்கும் வெளிநாட்டவர்களுக்கு மற்றும் நாட்டு எல்லைகள் ஊடாக மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல் வியாபாரம் மற்றும் மோசடிகள் மற்றும் ஏனைய முறையற்ற குடிப்பெயர்வுகளை அடையாளம் கண்டு அவற்றை தடுப்பதற்கு புலனாய்வுப் பிரிவுக்கு உதவுதல், குடிவரவு மற்றும் குடியகல்வு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல், மேற்படி நிகழ்வுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களான குற்றப் புலனாய்வுத் திணைக்களம், நீதி அமைச்சு மற்றும் தேசிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சினால் வழிநடாத்தப்படும் ஆட்கடத்தல் வியாபாரத்தை தடுக்கும் செயலணிக்கு தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் தேவையான ஒருங்கிணைப்பை பேணிவரல், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட "ஆட்கட்டத்தல் வியாபாரம் பற்றிய அறிக்கைக்கு" குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தகவல்ளை பாதுகாப்பு அமைச்சினூடாக அறிவித்தல், விமான நிலையங்களில் குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவு மற்றும் விசேடமாக எல்லைக் கண்காணிப்பு அலகுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல், வெளிநாட்டு குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளுடன் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாற்றம் செய்துகொள்ளல், அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் ஆட்கடத்தல் மற்றும் மனித வியாபாரத்தை தடுத்தல் தொடர்பிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4. இடர் மதிப்பீட்டு நிலையம் (RISK ASSESSMENT CENTER)

- 2019 ஆம் ஆண்டு மே மாதத்தில் புலனாய்வுப் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிலையத்தின் மூலம் எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய புலனாய்வுத் தகவல்களை சேகரித்தல், தயாரித்தல், திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இலங்கைக்கு வருகைதர உத்தேசிக்கும், நாட்டுக்குள் பிரவேசிக்கும், நாட்டினுள் தங்கியிருக்கும் மற்றும் இலங்கையிலிருந்து வெளியேறும் ஆபத்தான பயணிகள் மற்றும் அவர்களது போக்குகளை முன்னரே இனங்காண்பதன் மூலம் அவர்கள் நாட்டுக்குள் வருவதை அல்லது வெளியேறுவதை தடுத்தல் மற்றும் அந்தத் தகவல்களை பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங் களுடன் பரிமாற்றிக்கொள்வது இந்த இடர் மதிப்பீட்டு நிலையத்தின் பணியாகும். அதற்கமைய, குறுகியகால மற்றும் நீண்டகால குடிவரவு மற்றும் குடியகல்வு பாதுகாப்பு மற்றும் புலனாய்வு மூலோபாயங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு இந்த தரவுகள் பயனுள்ளதாக ஈடுபடுத்தப்படும்.
- இந்தப் பிரிவினால் ஆட்கடத்தல்காரர்கள், பாதிக்கப்பட்டவர்கள், ஆள் மோசடிக் காரர்கள், சட்ட விரோத இடப்பெயர்வாளர்கள், திட்டம்தீட்டும் குற்றவாளிகள், அவர்கள் அதற்காகப் பயன்படுத்தும் பயண வழிப் பாதைகள் இனம்காணப்படுகின்றன. அவ்வாறே, தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் ஆபத்தான புதிய குடிப்பெயர்வுப் போக்குகள் (Patterns ) தொடர்பில் அடிக்கடி மேற்பாரவை மேற்கொள்ளப்படுகின்றது.
- பயணி ஒருவர் நாட்டிற்குள் நுழையும் நோக்கத்திற்காக அவர் இலத்திரனியல் (ETA) வீசா ஒன்றினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதனை அனுமதிக்க முன்னர் அவரைப் பற்றித் தேடிப்பார்க்கும் பணி இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.
- நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் தங்கள் வீசாக்களைக் கடந்து தங்கியிருக்கும் தகவல்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல் மற்றும் தேவைக்கேற்ப ஏனைய திணைக்களங் களின் ஒத்துழைப்பை பெறுதல் மற்றும் பல்வேறு வீசா வகைகளின் கீழ் நாட்டிற்கு வரும் நபர்கள் மற்றும் அவர்கள் தங்கியிருக்கும் இடங்கள் பற்றிய தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், பரிமாற்றம் செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல் என்பன இந்த அலகின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
- அதற்கமைய, இடர் மதிப்பீட்டு நிலையத்தினால் பகுப்பாய்வு செய்யப்படும் தகவல்கள் பிரிவின் உள்ளக செயற்பாட்டுக்காக புலனாய்வு அலகு மற்றும் எல்லை கண்காணிப்பு அலகுடன் பரிமாற்றம் செய்யப்படுகின்றது.

## 5. எல்லைக் கண்காணிப்பு அலகு (BORDER SURVEILLANCE UNIT)

திட்டமிடப்பட்ட குற்றச் செயலாகக் கருதப்படும் ஆட்கடத்தல் வியாபாரம் மற்றும் வீசா முறைகேடுகளை புலனாய்வு செய்வதற்குத் தேவையான உதவியை வழங்கும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைய மேற்படி அலகு 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை (BIA ) மையப்படுத்தி நிறுவப்பட்டது.

### எல்லைக் கண்காணிப்பு அலகினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்

- இதன் மூலம் ஆட்கடத்தல் வியாபாரிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள், ஆட்கடத்தல் காரர்கள் சுற்றுலா வீசாக்களை துஷ்பிரயோகம் செய்வோர் ஆகியோரை அடையாளம் காண்பது தீவிரப்படுத்தப்படுகின்றது. இந்த அலகின் மூலம் கண்டறியப்படும் புலனாய்வுத் தகவல்களை புலனாய்வுப் பிரிவுக்கு மற்றும் ஆட்கடத்தலை தடுக்கும் தேசிய வள நிலையத்திற்கு அறிவிப்பதன் மூலம் ஆட்கடத்தல், மனித வியாபாரம் அல்லது வேறு திட்டமிடப்பட்ட குற்றங்கள் பற்றிய புலனாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, புலனாய்வுப் பிரிவினால் கண்டறியப்படும் புலனாய்வுத் தகவல்கள் அந்தப் பிரிவுக்கு அறிவிக்கப்படுவதனால் விமான நிலையத்தில் அதிகாரிகளின் கடுமையான பரீட்சிப்புக்கு ஆளாக்கப்படுவர்.
- 2024 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவினால் போலியான ஆவணங்கள் 190 அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, முறையற்ற குடிப்பெயர்வுகள் 295 மற்றும் அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் வசதியளிப்பவர்கள், குற்றங்களுடன் தொடர்புடையவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டத்துடன. மேலும், இலங்கையை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல் செயற்பாடுகள் முறியடிக்கப்பட்டுள்ளன.
- இந்தப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பரீட்சிப்பு ஆய்வுகூடம் (Document Lab ) மூலம் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆவணங்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வ தோடு, அந்தத் தகவல்கள் இந்தத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் விமான சேவை கம்பனிகளுக்கு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.
- 2024 ஆம் ஆண்டில், இந்தப் பிரிவின் நோக்கங்கள் மற்றும் திறன் மேம்பாட்டில், புதிய கூட்டாண்மைகளுடன் சேர்ந்து பெரும் வெற்றி அடையப்பட்டது. அதற்கமைய, 4 இருதரப்பு மற்றும் பலதரப்பு கூட்டத் தொடர்கள், 6 பயிற்சிப் பட்டறைகள் மற்றும் 3 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- மேலும், இந்தப் பிரிவினால் குற்றங்களுக்கு வசதியளிப்பவர்கள் 32 பேர் மற்றும் மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் 207 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் முதல் முறையாக, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்தப் பிரிவு, பாலி செயல்முறையின் பிராந்திய ஒத்துழைப்பு அலுவலகத்துடன் இணைந்து செயலாற்றியது.

## 1.5.6 தகவல் தொழில்நுட்பம் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு

கட்டுப்பாட்டாளரின் (தகவல் தொழில்நுட்பம்) மேற்பார்வையின் கீழ் இப் பிரிவு இயங்குகின்றது.

**அடிப்படை செயற்பாடு**

தற்போது பயன்பாட்டிலுள்ள மென்பொருள் முறைமைகளையும், வன்பொருள் முறைமைகளையும் தடையின்றி பேணிச் செல்வதும் பொது மக்களுக்கு உயரிய சேவைகளை வழங்குவதும் புதிய தொழில்நுட்ப முறைமைகளை அறிமுகம் செய்த வண்ணம் தகவல் முறைமையை விருத்தி செய்வதும் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

அதே போன்று, இந்தத் திணைக்களத்தின் கணினி முறைமைக்கான சேவைகளை வழங்கும் வெளி நிறுவனங்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களை உரியவாறு இற்றைப்படுத்தல், ஒப்பந்தங்களின் பிரகாரம் நடவடிக்கைகளை பேணிச் செல்லல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பனவும் இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற மற்றும் சில பணிகளாகும்.

மேலும், அரசாங்க அமைச்சுகள், திணைக்களங்கள், நீதிமன்றங்கள், பாதுகாப்பு பிரிவுகள் (பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகள்), நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பல்வேறு நபர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன. இந்தத் திணைக்களத்தின் தரவு அமைப்பிலிருந்து நிறுவனங்களுக்கு இப்பிரிவால் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக, பின்வரும் முக்கிய பணிகளும் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

1. பொதுமக்களின் தேவைகளுக்கு ஏற்ப கணினி மென்பொருள் மற்றும் மொடியுலர் அபிவிருத்திக்கு தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்கி சேவையை பயனுள்ள வகையில் மேம்படுத்தல்.
2. திணைக்களத்தின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.

3. பயன்பாட்டிலுள்ள வன்பொருட்கள் மற்றும் மென்பொருள் தொகுதியை தரமுயர்த்தல் (Upgrade ).
4. நீதிமன்ற கட்டளைகளுக்கு அமைய பயணிகளின் விமானப் பயண நடவடிக்கைகளை இற்றைப்படுத்தல்.
5. இந்தப் பணி தற்போது இந்தத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறும் நீதிமன்றக் கட்டளைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இந்தப் பணியில் ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்ப்பதற்காக ஏற்புடைய Interface Development மூலம் விமானப் பயணங்களைத் தடை செய்யும் பணியை நீதிமன்றத்திற்கே வழங்குவதற்கு Central Black List கருத்திட்டம் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இது 2025 ஆம் ஆண்டில் நிறைவடையும்.
6. கட்டுப்பாட்டாளர் (கடவுச்சீட்டு) அவர்களின் உத்தரவுக்கு அமைய கடவுச்சீட்டுக்களை கறைநிரலில் (Black List) சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

### காணாமல் போன மற்றும் களவாடப்பட்ட கடவுச் சீட்டுப் பிரிவு (SLTD)

காணாமல் போன அல்லது களவாடப்பட்ட கடவுச் சீட்டுக்கள் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்படும் தகவல்கள் மத்திய தகவல் பணியகத்தினால் அல்லது வெளிநாட்டு தூதரகப் பிரிவினால் நேரடியாக அல்லது திணைக்களத்திற்கு தகவல்கள் பரிமாற்றப்படுகின்றன. அவை புலனாய்வு செய்யப்பட்டு அந்த கடவுச்சீட்டுக்களை மீண்டும் பயன்படுத்த முடியாதவாறு இரத்துச்செய்து சர்வதேச பொலிஸாருக்கு (INTERPOL ) அனுப்பப்படுகின்றது. அவ்வாறான கடவுச் சீட்டொன்றின் மூலம் வேறு ஆளொருவர் வெளிநாடு செல்வதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, அவ்வாறான சட்ட விரோத செயல்களை தடுப்பது (SLTD ) தொகுதியின் பிரதான நோக்கமகும்.

2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையில் மத்திய தகவல் பணியகத்தினால் (NCB ) மற்றும் வெளிநாட்டு தூதரகப் பிரிவினால் (SLDM ) கடவுச் சீட்டுக்கள் 3921 திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதோடு, 354 கடவுச்சீட்டுக்கள் சர்வதேச பொலிஸின் தரவுத் தளத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எஞ்சிய கடவுச்சீட்டுக்கள் உரிமையாளர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

### இணைந்த தகவல் முகாமைத்துவப் பிரிவு (IEMS)

குடிவரவு, குடியகல்வு தகவல்கள் மற்றும் புள்ளிவிபரத் தரவுகளை வழங்குவதற்காக இணைந்த தகவல் முகாமைத்துவப் பிரிவு (IEMS) நிறுவப்பட்டுள்ளது. இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டு தூதரகங்கள் நேரடியான தொடர்பைப் பேணுவது இப்பிரிவுடனாகும். தேவையான போது வீசா வழங்குவதற்கு முன்னர் கடவுச் சீட்டு தொடர்பான உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும் நடவடிக்கை இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31ஆம் திகதி வரை எமது திணைக்களத்தினால் 555 வினவுகைளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.

### மீண்டும் பொறுப்பேற்கும் பிரச்சினை முகாமைத்துவத் தொகுதி (RCMS)

வெளிநாடு ஒன்றில் நாடுகடத்தப்படும் இலங்கையர்களை அந்தந்த நாடுகளில் காணப்படும் தூதரகங்கள் ஊடாக அவர்களது இலங்கை குடியுரிமை பற்றிய தகவல்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கணினித் தொகுதியின் மூலம் எமது திணைக்களத்திற்கு அறிவிக்கப்படும். அந்த கணினித் தொகுதியூடாகவே திணைக்களத்திலுள்ள கடவுச் சீட்டுத் தரவுகள் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் தரவுகளைப் பயன்படுத்தி இறுதியாக அந்த ஆள் இலங்கைப் பிரஜையா என்பது உறுதிப்படுத்தப்படும். அதன் பின்னர் தற்காலிக கடவுச் சான்றிதழொன்றை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்படும்.

## 1.5.6.1 இறங்கு துறைகள் கிளை

இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்கள் இலங்கைக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்தல், அத்தகைய கடவுச்சீட்டுக்கள் வைத்திருப்பவர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதை முறைமைப்படுத்தல், இலங்கை கடவுச்சீட்டை வைத்துள்ள ஒட்டுமொத்த குடிவருவோர் மற்றும் குடியகல்வோரின் தடைநீக்க நடவடிக்கைகளை வினைத்திறனுடன் பயன்மிக்க வகையில் தேசியப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி நாட்டின் பொருளாதாரத்திற்கு நேர்மறையாக ஊக்கமளித்து இலங்கையைச் சூழவுள்ள அனைத்து செயற்பாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களின் பணிகளை மேற்கொள்வது இந்தக் கிளையின் பிரதான பணியாகும். அதற்குத் தேவையான பௌதீக மற்றும் மானிட ஆதரவு சேவைகளை வழங்குதல், முழு வாடிக்கையாளர் தளத்தையும் ஒருங்கிணைத்தல். மேலும், இலங்கையில் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் வீசா பிரிவுகள் நிறுவப்படாத வெளிநாடுகளுக்கு இலங்கை

கடவுச்சீட்டுகளை கூரியர் மூலம் அனுப்புவதற்கு தேவையான சட்ட அதிகாரத்தை குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் சார்பில் வழங்குதல். அரசாங்க மற்றும் பகுதியளவு அரசாங்க நிறுவனங்களுக்கு சட்ட அமுலாக்கலுக்குத் தேவைப்படும் எல்லைக் கட்டுப்பாட்டுத் தகவல்களை தேவையான அடிப்படையில் வழங்குதல்.

இலங்கையில் வீசா பிரிவுகள் நிறுவப்படாத நாடுகளுக்கு செல்ல விரும்பும் இலங்கை கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு இலங்கையில் இருந்து அந்நாட்டு தூதரகத்திற்கு கடவுச்சீட்டுக்களை கூரியர் மூலம் அனுப்புவதற்கு சட்டப்பூர்வ அனுமதியை வழங்குதல்.

- இலங்கையில் தரையிறங்கும் வெளிநாட்டு கடற்படைக் குழுக்களுக்கு ஏற்புடைய பிணைமுறிகளை ஏற்புடைய கடற்படை முகவர்களுடன் மேற்கொள்ளல்.
- அனைத்து அங்கீகரிக்கப்பட்ட செயலில் உள்ள துறைமுகங்களின் பௌதீக மற்றும் மானிட மேம்பாட்டு நடவடிக்கைகளை மீளாய்வு செய்து தேவையான துறைகளுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- துறைமுகங்களின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளை எதிர்வுகூறல்.
- எல்லைக் கட்டுப்பாடு தொடர்பான விடயங்களில் பொருத்தமான பிரதிநிதித்துவங்களை வழங்குதல்.
- பயணிகள் கப்பல்கள் மூலம் இலங்கைக்கு விஜயம் செய்ய விரும்பும் பயணிகளுக்கு தேவையான அனுமதியை கடற் பரப்பிலேயே வழங்கும் பொருட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களை அனுப்புவதற்கான அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, விமான நிலையங்கள் மற்றும் விமான நிறுவனங்கள் ஏற்புடைய அமைச்சு, இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய அமைச்சு, இலங்கை கப்பல் முகவர் நிறுவனம் (CASA ), விமான சேவை கம்பனிகளின் பிரதிநிதிகள், ஏற்புடைய முகவர் நிறுவனங்கள் (AOC ) போன்ற அரச, அரச சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- எல்லைக் கட்டுப்பாடு தொடர்பான தொழிற்சங்கங்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

### செயற்பாடுகள்

1. இலங்கைக்கு வரும் மற்றும் இலங்கையிலிருந்து புறப்படும் பயணிகளுக்கு தடைநீக்க அனுமதி நடவடிக்கைகள்.
2. இலங்கையில் வெளிநாடுகளின் தூதரகங்கள் நிறுவப்படாத நாடுகளுக்கான நுழைவு விசாவைப் பெற வேண்டிய நபர்களின் கடவுச்சீட்டுகளை ஏற்புடைய தூதரகங்கள் உள்ள நாடுகளுக்கு தபால் மூலம் அனுப்புவதற்கு (கூரியர்) அனுமதி வழங்குதல்.
3. இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள கப்பலின் பணியாளர்களுக்கு தற்காலிகமாக தறையிறங்குவதற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
4. இலங்கைக்கு வரும் வெளிநாட்டு கப்பற் பணியாளர்களுக்கு பிணைமுறிப் பத்திரங்கள் (ஸ்டிக்கர்கள்) வழங்குதல்.
5. பல்வேறு நிறுவனங்களின் தேவைக்கேற்ப வெளிநாடுகளுக்குச் சென்ற பயணிகளின் குடியகல்வுத் தகவல் அடங்கிய கடிதங்களை வழங்குதல்.
6. இலத்திரனியல் பயண அங்கீகாரம் (Electronic Travel Authorization ) இன்றி இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இறங்கு துறைகளில் இலத்திரனியல் பயண அங்கீகாரத்தை வழங்குதல்.
7. நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவுகளுக்கு அமைய நாட்டை விட்டு வெளியேறல் மற்றும் வருகைத் தரல் தடைசெய்யப்பட்டுள்ள பயணிகள் நாட்டிலிருந்து வெளியேறுதல் மற்றும் நாட்டுக்குள் வருதல் தொடர்பான தகவல்களைக் கோரி பிற நிறுவனங்கள் மூலம் அனுப்பும் கடிதங்களுக்கு பதில் அளித்தல்.
8. இலங்கையிலிருந்து புறப்படும்போதும், இலங்கைக்கு வந்தடையும் போதும் இறங்கு துறைகளில் பயணிகளால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய குடிவரவு / குடியகல்வுப் படிவங்களை வழங்குதல்.
9. இறங்குதுறைகளுடன் இணைக்கப்பட்டுள்ள குடிவரவு மற்றும் குடியல்வு உத்தியோகத்தர்களின் சேவைகளை வழிநடத்தல், மேற்பார்வை செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

### 1.5.7 குடியுரிமைப் பிரிவு

1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டத்தினால் குடியுரிமைப் பிரிவிற்கு நியதிச்சட்டத் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. குடியுரிமைச் சட்டத்தை அமுல் செய்யும் நிறைவேற்றுத் தத்துவம் நிரல் அமைச்சின் செயலாளருக்கே உண்டு. அமைச்சு செயலாளரின் நிறைவேற்றுத் தத்துவங்கள் உதவிச் செயலாளர் ஊடாக நிறைவேற்றப்படும். அந்த தத்துவங்கள் குடியுரிமைப் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் மூலம் பிரயோகிக்கப்படும். குடியுரிமைச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளும் நிறைவேற்று நடைமுறைகளும் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டுத் தூதரகங்களூடாக கடவுச்சீட்டு விநியோக தொழிற்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புபடுவதால் குடியுரிமைப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### 1.5.8 நிதிப் பிரிவு

பிரதான கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் கணக்காளர் (செலவினம்) மற்றும் கணக்காளர் (வருமானம்) ஆகியோரின் வழிகாட்டலின் பேரில் கொடுப்பனவுப் பிரிவு, வரவுசெலவுப் பிரிவு மற்றும் வருமானப் பிரிவு எனும் மூன்று அலகுகளின் கீழ் திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### செயற்பாடுகள்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை சீராக மேற்கொள்வதே நிதிப் பிரிவின் பிரதான பணியாகும். வருமானம் ஈட்டும் திணைக்களம் என்ற வகையில், வருமானம் சேகரிப்பு, கணக்கு வைத்தல் மற்றும் மேற்பார்வைசெய்தல், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு நடவடக்கைகள், பொது வைப்புக் கணக்கு மற்றும் திணைக்களத்திற்குரிய ஆதன முகாமைத்துவம் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் திறைசேரிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக திணைக்களத்திற்கான ஒதுக்கீடுகளை உரிய எல்லைகளைப் பேணிய வண்ணம் செலவினங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டல் வழங்குதல், இந்தத் திணைக்களத்தின் வருடாந்த / மாதாந்த அறிக்கைகள், வருடாந்த வரவு – செலவு மதிப்பீடு, வருடாந்த வருமான மதிப்பீடு, ஒதுக்கீட்டுக் கணக்கு, மாதாந்த கணக்குப் பொழிப்பு,பொது வைப்புக் கணக்கு அறிக்கைகளைத் தயாரித்து உரிய திகதிக்கு திறைசேரிக்கு மற்றும் ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல் உட்பட திணைக்களத்தின் அனைத்து நிதி நடவடிக்கைகளையும் வழிநடாத்தல் மற்றும் முகாமை செய்தல் நிதிப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது.

#### வருமானம் மற்றும் இலக்கிடப்பட்ட முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமான இலக்கு ரூ.பில். 35.10 ஆக இருந்தது. 2024 ஆம் ஆண்டில் உண்மையாகவே உழைக்கப்பட்ட மொத்த வருமானம் 38.01 பில்லியன் ரூபா ஆகும். 2023 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட மொத்த வருமானமான ரூ.பில். 42.77 உடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் மொத்த வருமானம் 4.76 பில்லியன் ரூபாவினால் வீழ்ச்சியடைந்துள்ளது. புதிய கடவுச்சீட்டுக்களை வழங்குவதில் விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகள் இதற்கு ஏதுவாகின.

#### 2024 ஆம் ஆண்டில் உண்மைச் செலவினம்

2024 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் செலவுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.மில் 5,247.31 ஆகும். அந்த நிதி ஒதுக்கீடுகளில் ரூ.மில். 2,650.87 தொகை மீண்டுவரும் செலவினங்களுக்காகவும் ரூ.மில். 2,596.44 தொகை மூலதனச் செலவினங்களுக்காகவும் அனுமதிக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில் மொத்த உண்மைச் செலவினம் ரூ.மில். 4,667.75 ஆகும். அதில் மீண்டுவரும் செலவினங்களுக்காக ரூ.மில்.2,382.59 தொகையும் மூலதனச் செலவினங்களுக்காக ரூ.மில். 2,285.16 தொகையும் செலவிடப்பட்டுள்ளது.

### 1.5.9 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

பிரதம உள்ளகக் கணக்காய்வாளரின் மேற்பார்வையின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இயங்குகின்றது.

#### பிரிவின் குறிக்கோள்கள்:

- திணைக்களத்தின் நோக்கங்களை அடைவதற்கு பங்களிப்புச் செய்யும் வகையில் நிதி விடயங்களில் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பில் பங்கேற்று அந்த விடயங்களில் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கும்

கண்டறிவதற்கும் பயன்படுத்தப்படும் உள்ளக பரிசோதனைகளின் ஒழுங்குமுறை மற்றும் போதுமான தன்மை குறித்த தொடர்ச்சியான மதிப்பாய்வு மற்றும் சுயாதீன மதிப்பீட்டைப் பேணிவரல்.

❖ திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட அல்லது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதிலும், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் அடையப்பெற்ற முன்னேற்றத்தை தீர்மானிப்பதில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் முன்னேற்ற மீளாய்வுக் குழுவுக்கும் உதவுதல்.

❖ இந்தப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கும் திணைக்களத் தலைவருக்கும் முன்னேற்ற / ஆய்வுக் குழுவிற்கும் இடையே, ஏற்புடையவாறு ஒரு இணைப்பாளராகச் செயல்படுதல்.

**பிரிவின் கடமைகள்**

❖ பிழைகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கு திணைக்களத்திற்குள் செயல்படுத்தப்படும் உள்ளக கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின் திட்டம் உண்மையான செயல்பாட்டின் அடிப்படையில் பயனுள்ளதாக உள்ளதா என்பதை தேடிப் பார்த்தல்.

❖ கணக்குகள் மற்றும் பிற அறிக்கைகளின் நம்பகத்தன்மையை தீர்மானிப்பதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா என்பதை தேடிப் பார்த்தல்.

❖ பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவர்களின் செயலாற்றுகையின் தரத்தை மதிப்பீடு செய்தல்.

❖ பொது நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் மற்றும் பொதுத் திறைசேரியினால் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள மேலதிக அறிவுறுத்தல்கள் மற்றும் அரசாங்க தாபன விதிக்கோவை, அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதி செய்தல்.

❖ வீண்விரயம், செயலற்ற திறன் மற்றும் அதிகப்படியான செலவினங்களைத் தடுப்பதற்கும் கண்டறிவதற்கும் தெரிவுசெய்யப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் செயல்திறனை தேடிப்பார்த்தல்.

❖ திணைக்களத்தின் கணக்கியல் நடைமுறைகள் மற்றும் பணச் செலவுக்கு வழிவகுக்கும் செயல்பாடுகளை ஆய்வு செய்தல் மற்றும் திணைக்களத்தின் ஆதன மற்றும் சொத்துக்களை பாதுகாப்பாகவும், சிக்கனமாகவும், சரியான முறையிலும் பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்டறிதல் மற்றும் தேவைப்படும்போது விசேட விசாரணைகளை நடத்துதல்.

❖ தொழில்நுட்ப அல்லது கணக்கியல் கண்ணோட்டத்திற்கு அப்பால் முகாமைத்துவக் கண்ணோட்டத்தில் திணைக்களத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பில் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

❖ பணிகள், திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தையும், அவற்றின் கால அட்டவணைகள் எந்த அளவிற்கு இலக்குகளை அடைவதை நோக்கிச் செல்கின்றன என்பதையும் மதிப்பீடு செய்தல்.

❖ பணிகளை செயல்படுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தும் பிரச்சனைக்குரிய பகுதிகள் குறித்து இற்றைப்படுத்தப்பட்ட நிலைய விசாரணைகளை நடத்துதல்.

❖ அத்தகைய செயற்பாட்டுப் பணிகளை மேற்பார்வை செய்வதில் பயன்படுத்தப்படும் கட்டுப்பாடுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.

## 2024 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள்

**சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்**

I. இலத்திரனியல் பயண அங்கீகாரம் (ETA ) இன்றி இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இறங்கு துறைகளில் இலங்கைக்குள் நுழைவதற்கான இலத்திரனியல் பயண அங்கீகாரம் (ETA ) வழங்குவது குறித்த உள்ளக தணிக்கை அறிக்கை – 2023

II. கண்டி பிராந்திய அலுவலகத்தின் உள்ளக கணக்காய்வு – 2024

III. ஒரு நாள் சேவைக்காக அதிகமாக செலுத்தப்பட்ட பணத்தைத் திரும்பப் பெறுவது குறித்து விசேட விசாரணை – 2024

IV. சுகாதார வசதிகள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை – 2024

V. செயலற்ற சொத்துக்கள் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை – 2024

VI. வைப்புக் கணக்கு தொடர்பான உள்ளக கணக்காய்வு – 2024

VII. தபால் கிளையின் செயற்பாடுகள் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை – 2024

VIII. இலங்கை கடவுச்சீட்டுகளின் தரத்தைப் பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பான கொள்கைகளை செயல்படுத்துதல் மற்றும் கடவுச்சீட்டுகளை வழங்குவது தொடர்பான செயல்முறை தொடர்பான கணக்காய்வு – 2024

IX. உப கட்டுநிதி வழங்குதல் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை – 2024

X. வங்கிக்கணக்கிணக்க அறிக்கைகள் தயாரிப்பது குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை – 2024

XI. மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தின் உள்ளக கணக்காய்வு – 2024

XII. வருடாந்த செயல்திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளை செயல்படுத்துதல் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை – 2024

XIII. இணையத்தளத்தைப் இற்றைப்படுத்திய நிலையில் பராமரித்தல் தொடர்பான உள்ளக கணக்காய்வு அறிக்கை.

XIV. கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை – 2024

XV. சட்டவிரோத நபர்களைக் கைது செய்தல், தடுத்து வைத்தல் மற்றும் நாடு கடத்துதல் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை – 2024

XVI. இலங்கைக்கு வந்து செல்லும் பயணிகளின் தடைநீக்க அனுமதிகள் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை – 2024

XVII. வாகன நிர்வாகம் மற்றும் பராமரிப்பு, தனிப்பட்ட கோப்புகளைப் இற்றைப்படுத்தல் குறித்த உள்ளக கணக்காய்வு அறிக்கை - 2024

## 1. சமர்ப்பிக்கப்பட்ட விசேட அறிக்கைகள்

I. ஒரு நாள் சேவைக்காக அதிகமாக செலுத்தப்பட்ட பணத்தைத் திரும்பப் பெறுவது தொடர்பான விசேட விசாரணை - திருமதி. தினுஷிகா குணசேகர.

II. திணைக்களத்தில் ஏற்பட்ட அமைதியின்மை குறித்த ஆரம்ப விசாரணை அறிக்கை

III. விசா விண்ணப்பங்களை இணைய வழியில் சமர்ப்பித்தல்

IV. செயற்பாட்டு கையேடுகளின் தயாரிப்பு மற்றும் விடயப் பரப்பு

V. வெற்று கடவுச்சீட்டுக்களின் தற்போதைய இருப்பு நிலை

VI. ஒவ்வொரு காலாண்டிலும் திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்துதல்.

## 2. ஏனைய விசேட செயற்பாடுகள்

I. 2025 ஆம் ஆண்டிற்கான இடர் பதிவேட்டைத் தயாரித்தல்.

II. 2025 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்.

III. 2023 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் நலன்புரிச்சங்க வருடாந்த கணக்குகள் பரிசோதனை

## 3. திட்டமிடப்பட்டுள்ள எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள்

**2025 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.**

# அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

## 2.1 2024 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற முன்னேற்றம்.

### 2.1.1. கடவுச்சீட்டுப் பிரிவு

#### 2.1.1.1 கடவுச் சீட்டு விநியோகித்தலில் அடையப்பெற்ற முன்னேற்றம்

1) 2024 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அனைத்துவிதமான கடவுச் சீடடுக்களினதும் எண்ணிக்கை

| இராஜதந்திர | உத்தியோகபூர்வ | சகல நாடுகளுக்கும் | அவசர சான்றிதழ் | அடையாள சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 342 | 1,400 | 569,962 | 15,389 | 0 | 587,093 |

2) பிராந்திய அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை

| அலுவலகம் | இராஜதந்திர | உத்தியோகபூர்வ | சகல நாடுகளுக்கும் | அவசர சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கண்டி | - | - | 32,422 | 1,440 | 33,862 |
| வவுனியா | - | - | 32,307 | 484 | 32,791 |
| மாத்தறை | - | - | 31,051 | 1,425 | 32,476 |
| குருநாகல் | - | - | 32,327 | 824 | 33,151 |

3) 2024 ஆம் ஆண்டில் இணைய வழியில் விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை

| அவசர சேவை | சாதாரண சேவை | மொத்தம் |
|---|---|---|
| 8,618 | 42,323 | 50,941 |

4) 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை கடவுச் சீட்டு விநியோகம்

(கடவுச் சீட்டு வகைக்கு அமைய)

| வருடம் | இராஜதந்திர | உத்தியோக பூர்வ | சகல நாடுகளுக்கும் | மத்திய கிழக்கு நாடுகள் | அவசர சான்றிதழ் | அடையாள சான்றிதழ் | கடவுச்சீட்டுக் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 | 314 | 1,585 | 545,883 | 3916 | 19,674 | 1 | 571,373 |
| 2020 | 175 | 404 | 204,081 | 13 | 4,738 | - | 209,411 |
| 2021 | 398 | 860 | 381,301 | - | 1 | - | 382,560 |
| 2022 | 249 | 711 | 910,138 | - | 590 | 1 | 911,689 |
| 2023 | 241 | 1,112 | 900,388 | - | 88,39 | 2 | 910,582 |
| 2024 | 249 | 1,400 | 569,962 | - | 15,389 | 0 | 587,093 |
| மொத்தம் | 1719 | 6,072 | 3,511,753 | 3,929 | 40,392 | 4 | 2,985,615 |

5) 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை பிராந்திய அலுவலகங்களினால் வழங்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை

| அலுவலகம் | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|
| கண்டி | 45,982 | 16,230 | 27,395 | 53,120 | 50,864 | 33,862 |
| வவுனியா | 29,820 | 12,269 | 22,708 | 54,881 | 56,261 | 32,791 |
| மாத்தறை | 32,109 | 11,353 | 20,754 | 48,464 | 39,301 | 32,476 |
| குருணாகல் | 29,589 | 11,451 | 22,306 | 50,680 | 45,131 | 33,151 |
| மொத்தம் | 137,500 | 51,303 | 93,163 | 207,145 | 191,557 | 132,280 |

### 2.1.1.2 கடவுச்சீட்டு திருத்தக் கிளை

1) பிரதான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் கடவுச் சீட்டு திருத்தங்கள் - 2024

| வகை | மொத்தம் |
|---|---|
| ஒரு வெளிநாட்டுப் பயணத்திற்கு மாத்திரம் செல்லுபடியாக்கல் | 220 |
| தனிவழிப் பயணக் கட்டுப்பாட்டை இரத்துச் செய்தல் | 3864 |
| இரட்டைப் பிரஜாவுரிமையை உள்ளடக்குதல் | 272 |
| பிள்ளைகளின் விபரங்களை நீக்குதல் | 02 |
| தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்குதல் | 9210 |
| திருமணத்திற்கு முன்னரான பெயரை இடுதல் | 107 |
| முதற் பெயர் / வேறு பெயர் மாற்றம் செய்தல் | 5700 |
| திருமணத்திற்கு பின்னரான பெயரை இடுதல் | 553 |
| வேறு பெயர் திருத்தங்கள் | 01 |
| வேறு திருத்தங்கள் 01 | 5333 |
| வேறு திருத்தங்கள் 02 | 31 |
| வேறு திருத்தங்கள் 03 | 01 |
| திருமணத்திற்கு முன்னரான முதற் பெயரை உள்ளடக்குதல் | 02 |
| பதவியை உள்ளடக்குதல் / பதவியை நீக்குதல் | 12171 |

### 2.1.1.3 வெளிநாட்டுத் தூதரகக் கிளையின் முன்னேற்றம்

1) **2024 ஆம் ஆண்டில் இந்தக் கிளையின் மூலம் பதிவுசெய்யப்பட்ட, அனுமதிக்கப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை**

| மாதம் | பதிவுசெய்யப்பட்ட | அனுமதிக்கப்பட்ட | விநியோகிக்கப்பட்ட |
|---|---|---|---|
| ஜனவரி | 5191 | 5147 | 4341 |
| பெப்ரவரி | 5812 | 3865 | 4714 |
| மார்ச் | 6684 | 4792 | 5804 |
| ஏப்ரல் | 3883 | 5227 | 6609 |
| மே | 6173 | 5159 | 5167 |
| ஜூன் | 5225 | 3847 | 5470 |
| ஜூலை | 5371 | 5090 | 3592 |
| ஆகஸ்ட் | 5028 | 5095 | 2086 |
| செப்டம்பர் | 5067 | 4060 | 1777 |
| ஒக்டோபர் | 5211 | 4150 | 2788 |
| நவம்பர் | 4843 | 5526 | 3522 |
| டிசம்பர் | 4878 | 5143 | 8511 |
| **மொத்தம்** | **63366** | **57101** | **54381** |



2) 2024 ஆம் ஆண்டு இந்தக் கிளை ஊடாக விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை

| மாதம் | எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 4341 |
| பெப்ரவரி | 4714 |
| மார்ச் | 5804 |
| ஏப்ரல் | 6609 |
| மே | 5167 |
| ஜுன் | 5470 |
| ஜுலை | 3592 |
| ஆகஸ்ட் | 2086 |
| செப்டம்பர் | 1777 |
| ஒக்டோபர் | 2788 |
| நவம்பர் | 3522 |
| டிசம்பர் | 8511 |
| **மொத்தம்** | **54381** |



3) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 வரை வெளிநாட்டுத் தூதரகக் கிளையினால் விநியோகிக்கப்பட்ட கடவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை

| மாதம் | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 3,610 | 1,983 | 5,592 | 5,634 | 4341 |
| பெப்ரவரி | 4,370 | 2,793 | 3,290 | 2,886 | 4714 |
| மார்ச் | 2,243 | 6,148 | 4,487 | 5,019 | 5804 |
| ஏப்ரல் | 3,112 | 3,411 | 5,003 | 3,543 | 6609 |
| மே | 1,935 | 6,582 | 6,115 | 8,815 | 5167 |
| ஜூன் | 3,147 | 8,815 | 5,731 | 5,170 | 5470 |
| ஜூலை | 3,155 | 5,983 | 6,323 | 4,800 | 3592 |
| ஆகஸ்ட் | 3,630 | 5,580 | 6,006 | 7,220 | 2086 |
| செப்டம்பர் | 5,583 | 4,011 | 4,080 | 4,412 | 1777 |
| ஒக்டோபர் | 5,290 | 5,956 | 661 | 3,475 | 2788 |
| நவம்பர் | 4,331 | 4,186 | 5,322 | 3,943 | 3522 |
| டிசம்பர் | 2,795 | 5,440 | 5,469 | 2,875 | 8511 |
| மொத்தம் | 43201 | 60,888 | 58,079 | 57,792 | 54381 |



## 2.1.2 வீசாப் பிரிவு

**ஏழு நாடுகளுக்கு கட்டணம் இன்றிய சுற்றுலா வீசா வழங்கல்**

உலகின் முன்னணி பொருளாதாரத்திற்கு உரிமைக் கொண்டாடும் நாடுகள் கொவிட் தொற்றுநோய் முடிவுக்கு வந்தவுடன் தங்களது பிரஜைகளை வெளிநாட்டு சுற்றுலாப் பயணங்களுக்கு மீண்டும் திறந்து விடுகின்றன. எனவே, பல ஆசிய சுற்றுலாத் தலங்கள் அதற்காகப் போட்டியிடத் தொடங்கியுள்ளதால், நம் நாட்டிலும் இழந்த சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தும் பொருட்டு குடிவரவு மற்றும் குடியகல்வு செயற்பாடுகளை மேலும் எளிதாக்குவதற்காக அமைச்சரவையின் தீர்மானத்திற்கிணங்க, சீனா, இந்தியா, இந்தோனேசியா, ரஷ்யா, தாய்லாந்து, மலேசியா மற்றும் ஜப்பான் ஆகிய ஏழு நாடுகளுக்கு 2023.11.28 ஆம் திகதி முதல் இலவச சுற்றுலா விசாக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய, அந்த ஏழு நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளின் வருகை கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| நாடு | வருகை (On Arrivals) | | இணையழி (Online) | | வருகை On Arrivals) | இணையவழி (Online) |
|---|---|---|---|---|---|---|
| | 2022.11.28 2022.12.31 | 2023.11.28 2023.12.31 | 2022.11.28 2022.12.31 | 2023.11.28 2023.12.31 | 2024.01.01 2024.12.31 | 2024.01.01 2024.12.31 |
| ரஷ்யா | 9132 | 6851 | 14324 | 33886 | 39363 | 103107 |
| இந்தியா | 1410 | 9412 | 13747 | 37097 | 96107 | 256310 |
| இந்தோனேஷியா | 25 | 68 | 109 | 195 | 2010 | 3816 |
| ஜப்பான் | 152 | 350 | 624 | 2712 | 4713 | 21091 |
| மலேசியா | 74 | 355 | 433 | 1487 | 2807 | 13288 |
| தாய்லாந்து | 30 | 82 | 265 | 573 | 1316 | 4848 |
| சீனா | 23 | 423 | 605 | 11307 | 40546 | 67087 |
| **மொத்த எண்ணிக்கை** | **10846** | **17541** | **30107** | **87257** | **186862** | **469547** |

கட்டணம் இன்றிய சுற்றுலா வீசா நடைமுறைக்கு வந்த பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை முன்னைய ஆண்டுடன் ஒப்புநோக்கல்

1) **2024 ஆம் ஆண்டில் இலத்திரனியல் பயண அனுமதியை வழங்குதல், புதிய வீசா விநியோகம் மற்றும் நீடிப்பு தொடர்பான முன்னேற்றம்.**

| விபரம் | எண்ணிக்கை |
|---|---|
| இ – பயண அனுமதியை வழங்குதல் (இணைய வழியில் – ONLINE) | 1087368 |
| இ – பயண அனுமதியை வழங்குதல் (வருகைதரு வீசா - ON ARRAIVAL) வசிப்பதற்கான வீசா வழங்குதல் | 463079 |
| இணைய வழி வீசா (TRANSIT VISA) | 49410 |
| வசிப்பதற்கான வீசாக்களை வழங்குதல் | 19659 |
| வசிப்பதற்கான வீசாக்களை நீடித்தல் | 21822 |
| குறுகிய கால அடிப்படையில் வீசாக்களின் காலத்தை நீடித்தல் (குறுகியகால, வியாபார மற்றும் பலமுறை நுழைவு வீசா) | 42230 |
| இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக வீசா தேவையிலிருந்து விடுவித்தல் (இலங்கையர்) | 1863 |

**2) 2018 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை இலத்திரனியல் பயணி அனுமதியை வழங்குதல், புதிய வீசா விநியோகம் மற்றும் நீடிப்புச் செய்தல் தொடர்பிலான முன்னேற்றம்.**

| விபரம் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|
| இ – பயண அனுமதியை வழங்குதல் | 2,307,541 | 1,533,386 | 374,068 | 234,313 | 691,427 | 1,635,268 | 1550447 |
| வசிப்பதற்கான வீசா வழங்குதல் | 27,395 | 23,219 | 9,294 | 15,861 | 23,318 | 23,311 | 19656 |
| வசிப்பதற்கான வீசாக்களை நீடித்தல் | 29,948 | 34,596 | 29,691 | 28,595 | 27,392 | 22,639 | 21822 |
| குறுகிய கால அடிப்படையில் வீசாக்களின் காலத்தை நீடித்தல் (குறுகியகால, வியாபார மற்றும் பலமுறை நுழைவு வீசா) | 63,452 | 61,031 | 31,985 | 20,246 | 41,775 | 27,941 | 42230 |
| இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக வீசா தேவையிலிருந்து விடுவித்தல் (இலங்கையர்) | 1,478 | 1,488 | 339 | 468 | 998 | 3,633 | 1863 |

- 2024 ஆம் ஆண்டில் இ – பயண அங்கீகாரம் வழங்குதல் 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.04.16 ஆம் திகதி வரை மற்றும் 2024.09.26 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை

- 2024.04.17 ஆம் திகதி வரை 2024.08.02 ஆம் திகதி வரை சுற்றுலா வீசாவை இணைய வழியில் வழங்குவதற்காக e-Visa முறை நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அதற்கமைய, விநியோகிக்கப்பட்ட சுற்றுலா வீசாக்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

| 2024.04.17 ஆம் திகதி முதல் 2024.08.02 ஆம் திகதி வரை | |
|---|---|
| ON LINE VISA (e-VISA) | 373323 |

## 3) வசிப்பதற்கான வீசாக்களை நீடித்தல் மற்றும் விநியோகித்தல் பற்றிய விரிவான குறிப்பு - 2024

| | வசிப்பதற்கான வீசா வகைகள் | நீடித்தல் | விநியோகித்தல் | தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட தொலைநகல் செய்திகள் | விமான நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட செய்திகள் (Landing Endorsement) |
|---|---|---|---|---|---|
| 01 | முதலீட்டுச் சபைகளில் பணியாற்றுபவர்கள் | 3092 | 1539 | 3070 | 118 |
| 02 | இலங்கைப் பெற்றோர்களின் பிள்ளைகள் | 212 | 317 | 6 | 0 |
| 03 | குடியுரிமைச் சட்டத்தின் 5.2 ஆம் பிரிவின் கீழ் | 131 | 1186 | 0 | 0 |
| 04 | குடியுரிமைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் | 97 | 296 | 0 | 0 |
| 05 | முதலீட்டு வகை - B | 4 | 3 | 0 | 0 |
| 06 | முதலீட்டு வகை - C | 81 | 9 | 13 | 0 |
| 07 | மதகுருமார் | 824 | 290 | 276 | 45 |
| 08 | நீதிமன்றக் கட்டளைகள் | 167 | 90 | 0 | 0 |
| 09 | முன்னர் இலங்கையர்களாக இருந்தவர்கள் | 2113 | 3434 | 26 | 0 |
| 10 | மருத்துவக் காரணிகள் மீது வருகைதந்தவர்கள் | 823 | 349 | 39 | 01 |
| 11 | அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGO) | 331 | 214 | 211 | 40 |
| 12 | அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) | 83 | 78 | 98 | 5 |
| 13 | சமய தொழிற்துறையினர் | 77 | 106 | 206 | 6 |
| 14 | தனியார் துறையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் | 6644 | 8347 | 3894 | 340 |
| 15 | பதிவு செய்யப்பட்ட இந்தியர்கள் | 6 | 0 | 0 | 0 |
| 16 | அரச துறை | 1168 | 1114 | 1557 | 265 |
| 17 | இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத்துணை | 2936 | 1632 | 9 | 7 |
| 18 | விருந்தினர் (RGS) | 9 | 0 | 0 | 0 |
| 19 | பொன் சுவர்க்க வீசா (GOLDEN PARADISE) | 3 | 0 | 0 | 0 |
| 20 | தொழிலில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு வாழ்க்கைத்துணை | 7 | 0 | 0 | 0 |
| 21 | எனது கனவு இல்லம் (SSRV ) | 140 | 0 | 0 | 0 |
| 22 | உத்தியோகபூர்வ | 271 | 313 | 335 | 36 |
| 23 | கல்விசார் | 2843 | 1350 | 1625 | 73 |
| 24 | இலங்கை பிரஜைகளின் தங்கிவாழ்வோர் | 10 | 3 | 0 | 0 |
| 25 | SAARC வீசா | 95 | 0 | 0 | 0 |
| 26 | கொழும்பு துறைமுக நகரம் | 12 | 469 | 0 | 586 |
| 27 | கூட்டு ஆதன வீசா | 7 | 0 | 0 | 0 |
| 28 | இலங்கைப் பிள்ளைகளின் பெற்றோர் | 22 | 14 | 0 | 0 |
| | **மொத்தம்** | **22567** | **23190** | **11365** | **1522** |

## 2.1.3 தகவல் தொழில்நுட்பம் மற்றும் எல்லைக் கட்டுப்பாடு

### 2.1.3.1 தகவல் தொழில்நுட்ப பிரிவு

**ஒன்றிணைந்த தகவல் முகாமைத்துவ அலகு (IEMS) மூலம் பதில் அளிக்கப்பட்ட வினவல்கள் பற்றிய தகவல்கள்**

| இல. | நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | புது டில்லியில் அமைந்துள்ள நேர்வே நாட்டின் தூதரகம் | 05 |
| 02 | அமெரிக்க தூதரகம் | 03 |
| 03 | அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஆலயம் | 33 |
| 04 | கனடா உயர்ஸ்தானிகர் ஆலயம் | 153 |
| 05 | ஐக்கிய இராச்சியத்தின் உயர்ஸ்தானிகர் ஆலயம் | 73 |
| 06 | பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆலயம் | 04 |
| 07 | இலங்கை மத்திய வங்கியின் புலனாய்வுப் பிரிவு | 44 |
| | **மொத்தம்** | **315** |

**மீண்டும் பொறுப்பேற்கும் பிரச்சினை முகாமைத்துவ அமைப்பு (RCMS)**

அதற்கிணங்க, 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை இந்த திணைக்களத்தினால் ஆட்கள் இலங்கையர்கள் என்பதை உறுதிப்படுத்தி தற்காலிக பயண ஆவணங்களை தயாரிப்பதற்காக இலங்கைத் தூதரகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| நாடு | RCMS அமைப்பின் மூலம் இலங்கையர் என்பது பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கை 2024.12.31 ஆம் திகதிக்கு |
|---|---|
| அவுஸ்திரேலியா | 110 |
| ஒஸ்ரியா | 04 |
| பஹ்ரேன் | 58 |
| பல்கேரியா | 02 |
| கனடா | 57 |
| சீனா | 54 |
| குரோஷியா | 04 |
| துபாய் | 2270 |
| எகிப்து | 21 |
| இத்தியோப்பியா | 02 |
| பின்லாந்து | 03 |
| பிரான்ஸ் | 92 |
| ஜேர்மன் | 59 |
| கிரீஸ் | 05 |
| இந்தோனேஷியா | 43 |

| நாடு | RCMS அமைப்பின் மூலம் இலங்கையர் என்பது பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கை 2024.12.31 ஆம் திகதிக்கு |
|---|---|
| ஈரான் | 01 |
| இஸ்ரேல் | 12 |
| இத்தாலி | 72 |
| ஜப்பான் | 23 |
| ஜோர்தான் | 30 |
| கென்யா | 05 |
| குவைட் | 5938 |
| லெபனான் | 66 |
| லித்துவேனியா | 01 |
| மலேசியா | 117 |
| மியன்மார் | 23 |
| நேபாளம் | 02 |
| நெதர்லாந்து | 03 |
| ஓமான் | 519 |
| பாகிஸ்தான் | 05 |
| பிலிப்பைன்ஸ் | 01 |
| போலாந்து | 11 |
| கட்டார் | 417 |
| ருமேனியா | 37 |
| ரஷ்யா கூட்டமைப்பு | 101 |
| சவூதி அரேபியா | 856 |
| சிங்கப்பூர் | 05 |
| சுவீடன் | 02 |
| சுவிட்சர்லாந்து | 126 |
| தாய்லாந்து | 42 |
| துருக்கி | 12 |
| ஐக்கிய இராச்சியம் | 47 |
| ஐக்கிய அமெரிக்கா | 08 |
| வியட்நாம் | 07 |
| மொத்தம் | **11273** |

## 2.1.3.2 இறங்கு துறைகள் கிளை

1) **அனுமதிக்கப்பட்ட துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் ஊடாக இலங்கைக்கு வருகை தந்த மற்றும் வெளியேறிய பயணிகளின் எண்ணிக்கை** – 2024

| துறைமுகம் / விமான நிலையம் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | வெளியேறியோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் | 3,730,378 | 3,639,150 |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 7,610 | 16,325 |
| மத்தளை விமான நிலையம் | 66,309 | 67,195 |
| கொழும்புத் துறைமுகம் | 30,579 | 33,438 |
| காலித் துறைமுகம் | 9,812 | 9,445 |
| நுரைச்சோலை துறைமுகம் | 127 | 100 |
| திருகோணமலைத் துறைமுகம் | 2,584 | 3,226 |
| இரத்மலானை விமான நிலையம் | 12 | 18 |
| யாழ்ப்பாணம் விமான நிலையம் | 18,570 | 20,668 |
| காங்கேசன்துறை துறைமுகம் | 3,305 | 7,091 |
| மொத்தம் | **3,787,659** | **3,878,283** |

பயணிகளின் வருகை மற்றும் புறப்பாடு – 2024









2) இலங்கைக்கு வருகைத்தந்த மற்றும் வெளியேறிய இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை மாதாந்தம் - 2024

| மாதம் | வருகைத்தந்தோர் | | | வெளியேறியோர் | | |
|---|---|---|---|---|---|---|
| | இலங்கைப் பிரஜைகள் | வெளிநாட்டவர்கள் | வருகைத் தந்த மொத்த எண்ணிக்கை | இலங்கைப் பிரஜைகள் | வெளிநாட்ட வர்கள் | வெளியேறிய மொத்த எண்ணிக்கை |
| ஜனவரி | 120,484 | 227,709 | 348,193 | 128,462 | 245,531 | 373,993 |
| பெப்ரவரி | 98,879 | 235,836 | 334,715 | 124,901 | 236,484 | 361,385 |
| மார்ச் | 107,063 | 228,245 | 335,308 | 125,814 | 243,440 | 369,254 |
| ஏப்ரல் | 128,563 | 168,507 | 297,070 | 127,404 | 195,694 | 323,098 |
| மே | 126,558 | 130,664 | 257,222 | 132,175 | 145,657 | 277,832 |
| ஜூன் | 142,769 | 133,573 | 276,342 | 120,919 | 124,173 | 245,092 |
| ஜூலை | 138,866 | 210,419 | 349,285 | 130,540 | 173,350 | 303,890 |
| ஆகஸ்ட் | 128,608 | 185,774 | 314,382 | 157,531 | 218,568 | 376,099 |
| செப்டம்பர் | 121,394 | 139,755 | 261,149 | 157,358 | 151,247 | 308,605 |
| ஒக்டோபர் | 114,351 | 154,297 | 268,648 | 128,766 | 150,731 | 279,497 |
| நவம்பர் | 120,636 | 204,921 | 325,557 | 121,994 | 184,707 | 306,701 |
| டிசம்பர் | 146,582 | 273,206 | 419,788 | 131,287 | 220,550 | 351,837 |
| மொத்தம் | 1,494,753 | 2,292,9061 | 3,787,659 | 1,587,151 | 2,290,132 | 3,877,283 |

இலங்கைக்கு வருகைத்தந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை
பிராந்தியங்களுக்கு அமைய - 2024

| மாதம் | ஆபிரிக்கா | ஆசியா | அவுஸ்தி ரேலியா | ஐரோப்பா | வட அமெரிக்கா | தென் அமெரிக்கா | அடையாளம் காணாத | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1,557 | 78,433 | 10,255 | 125,110 | 11,611 | 589 | 154 | **227,709** |
| பெப்ரவரி | 1,824 | 78,667 | 8,816 | 134,696 | 11,171 | 524 | 138 | **235,836** |
| மார்ச் | 1,435 | 75,691 | 12,659 | 124,137 | 13,688 | 525 | 110 | **228,245** |
| ஏப்ரல் | 2,068 | 64,388 | 10,702 | 79,627 | 11,035 | 609 | 78 | **168,507** |
| மே | 1,162 | 70,252 | 8,313 | 41,165 | 9,309 | 317 | 146 | **130,664** |
| ஜூன் | 1,787 | 69,500 | 10,050 | 42,334 | 9,461 | 313 | 128 | **133,573** |
| ஜூலை | 1,954 | 86,807 | 11,652 | 97,387 | 12,174 | 349 | 96 | **210,419** |
| ஆகஸ்ட் | 1,769 | 76,973 | 10,099 | 87,066 | 9,423 | 350 | 94 | **185,774** |
| செப்டம்பர் | 1,335 | 66,732 | 11,022 | 54,071 | 6,218 | 281 | 96 | **139,755** |
| ஒக்டோபர் | 1,582 | 72,452 | 10,123 | 62,330 | 7,283 | 438 | 86 | **154,297** |
| நவம்பர் | 1,823 | 79,855 | 12,158 | 100,962 | 9,558 | 448 | 117 | **204,921** |
| டிசம்பர் | 3,281 | 101,900 | 21,098 | 131,456 | 14,882 | 499 | 90 | **273,206** |
| மொத்தம் | **21,577** | **921,650** | **136,947** | **1,08,341** | **125,813** | **5,242** | **1,336** | **2,292,906** |

இலங்கைக்கு வருகைத்தந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை
பிராந்தியங்களுக்கு அமைய - 2024



### இலங்கையிலிருந்து வெளியேறிய இலங்கையர்களின் எண்ணிக்கை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அமைய மாதாந்தம் - 2024

| துறைமுகம் / விமான நிலையம் | ஜனவரி | பெப்ரவரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் | 119,056 | 97,885 | 105,757 | 127,296 | 125,658 | 141,730 | 137,771 | 127,619 | 119,615 | 112,508 | 119,494 | 145,506 |
| ஹம்பாந் தோட்டை துறைமுகம் | 3 | 18 | 4 | 17 | 12 | 7 | 12 | 9 | 9 | 0 | 19 | 6 |
| மத்தளை விமான நிலையம் | 0 | 1 | 1 | 1 | 4 | 5 | 0 | 0 | 0 | 1 | 61 | 3 |
| கொழும்புத் துறைமுகம் | 76 | 37 | 65 | 70 | 56 | 43 | 47 | 78 | 51 | 59 | 44 | 211 |
| காலித் துறைமுகம் | 140 | 80 | 123 | 69 | 88 | 83 | 131 | 181 | 186 | 142 | 179 | 152 |
| நுரைச்சோலை துறைமுகம் | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| திருகோண மலைத் துறைமுகம் | 0 | 3 | 301 | 10 | 0 | 2 | 8 | 8 | 0 | 0 | 6 | 0 |
| இரத்மலானை விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| யாழ்ப்பாணம் விமான நிலையம் | 1,209 | 854 | 812 | 1,100 | 740 | 899 | 893 | 648 | 944 | 663 | 623 | 704 |
| காங்கேசன் துறை துறைமுகம் | 0 | | 0 | 0 | 0 | 0 | 4 | 65 | 589 | 978 | 210 | 0 |
| மொத்தம் | *120,484* | *98,879* | *107,063* | *128,563* | *126,558* | *142,769* | *138,866* | *128,608* | *121,394* | *114,351* | *120,636* | *146,582* |

### இலங்கைக்கு வருகைதந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அமைய மாதாந்தம் - 2024

| துறைமுகம் / விமான நிலையம் | ஜனவரி | பெப்ரவரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் | 213,111 | 217,132 | 206,620 | 151,494 | 123,781 | 131,663 | 205,964 | 181,321 | 135,882 | 150,218 | 188,568 | 253,501 |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 77 | 2,065 | 41 | 3,928 | 3,264 | 32 | 1,363 | 2,129 | 1,068 | 35 | 2,164 | 43 |
| மத்தளை விமான நிலையம் | 11,793 | 11,474 | 10,928 | 7,506 | 500 | 36 | 5 | 106 | 50 | 1,450 | 10,811 | 12,459 |
| கொழும்புத் துறைமுகம் | 1,557 | 3,299 | 8,892 | 4,237 | 1,657 | 561 | 471 | 525 | 536 | 565 | 1,756 | 5,686 |
| காலித் துறைமுகம் | 743 | 1,121 | 805 | 616 | 627 | 534 | 578 | 530 | 674 | 723 | 716 | 591 |
| நுரைச்சோலை துறைமுகம் | 0 | 6 | 8 | 23 | 23 | 9 | 0 | 0 | 33 | 5 | 6 | 13 |
| திருகோணமலைத் துறைமுகம் | 41 | 61 | 202 | 129 | 116 | 100 | 1,211 | 67 | 131 | 101 | 74 | 13 |

| துறைமுகம் / விமான நிலையம் | ஜனவரி | பெப்ரவரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இரத்மலானை விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| யாழ்ப்பாணம் விமான நிலையம் | 387 | 678 | 741 | 574 | 696 | 638 | 827 | 946 | 809 | 626 | 659 | 900 |
| காங்கேசன்துறை துறைமுகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 150 | 572 | 570 | 167 | 0 |
| மொத்தம் | 227,709 | 235,836 | 228,245 | 168,507 | 130,664 | 133,573 | 210,419 | 185,774 | 139,755 | 154,297 | 204,921 | 273,206 |

**இலங்கையிலிருந்து வெளியேறிய இலங்கையர்களின் எண்ணிக்கை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அமைய மாதாந்தம் - 2024**

| துறைமுகம் / விமான நிலையம் | ஜனவரி | பெப்ரவரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டுநாயக சர்வதேச விமான நிலையம் | 119,056 | 97,885 | 105,757 | 127,296 | 125,658 | 141,730 | 137,771 | 127,619 | 119,615 | 112,508 | 119,494 | 145,506 |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 3 | 18 | 4 | 17 | 12 | 7 | 12 | 9 | 9 | 0 | 19 | 6 |
| மத்தளை விமான நிலையம் | 0 | 1 | 1 | 1 | 4 | 5 | 0 | 0 | 0 | 1 | 61 | 3 |
| கொழும்புத் துறைமுகம் | 76 | 37 | 65 | 70 | 56 | 43 | 47 | 78 | 51 | 59 | 44 | 211 |
| காலி துறைமுகம் | 140 | 80 | 123 | 69 | 88 | 83 | 131 | 181 | 186 | 142 | 179 | 152 |
| நுரைச்சோலை துறைமுகம் | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| திருகோணமலைத் துறைமுகம் | 0 | 3 | 301 | 10 | 0 | 2 | 8 | 8 | 0 | 0 | 6 | 0 |
| இரத்மலானை விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| யாழ்ப்பாணம் விமான நிலையம் | 1,209 | 854 | 812 | 1,100 | 740 | 899 | 893 | 648 | 944 | 663 | 623 | 704 |
| காங்கேசன்துறை துறைமுகம் | 0 | | 0 | 0 | 0 | 0 | 4 | 65 | 589 | 978 | 210 | 0 |
| மொத்தம் | *120,484* | *98,879* | *107,063* | *128,563* | *126,558* | *142,769* | *138,866* | *128,608* | *121,394* | *114,351* | *120,636* | *146,582* |

**இலங்கையிலிருந்து வெளியேறிய வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு அமைய மாதாந்தம் - 2024**

| துறைமுகம் / விமான நிலையம் | ஜனவரி | பெப்ரவரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டுநாயக சர்வதேச விமான நிலையம் | 213,111 | 217,132 | 206,620 | 151,494 | 123,781 | 131,663 | 205,964 | 181,321 | 135,882 | 150,218 | 188,568 | 253,501 |
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் | 77 | 2,065 | 41 | 3,928 | 3,264 | 32 | 1,363 | 2,129 | 1,068 | 35 | 2,164 | 43 |
| மத்தளை விமான நிலையம் | 11,793 | 11,474 | 10,928 | 7,506 | 500 | 36 | 5 | 106 | 50 | 1,450 | 10,811 | 12,459 |
| கொழும்புத் துறைமுகம் | 1,557 | 3,299 | 8,892 | 4,237 | 1,657 | 561 | 471 | 525 | 536 | 565 | 1,756 | 5,686 |

| துறைமுகம் / விமான நிலையம் | ஜனவரி | பெப்ர வரி | மார்சு | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம் பர் | ஒக்டோ பர் | நவம் பர் | டிசம் பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலி துறைமுகம் | 743 | 1,121 | 805 | 616 | 627 | 534 | 578 | 530 | 674 | 723 | 716 | 591 |
| நுரைச்சோலை துறைமுகம் | 0 | 6 | 8 | 23 | 23 | 9 | 0 | 0 | 33 | 5 | 6 | 13 |
| திருகோணமலைத் துறைமுகம் | 41 | 61 | 202 | 129 | 116 | 100 | 1,211 | 67 | 131 | 101 | 74 | 13 |
| இரத்மலானை விமான நிலையம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| யாழ்ப்பாணம் விமான நிலையம் | 387 | 678 | 741 | 574 | 696 | 638 | 827 | 946 | 809 | 626 | 659 | 900 |
| காங்கேசன்துறை துறைமுகம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 150 | 572 | 570 | 167 | 0 |
| மொத்தம் | 227,709 | 235,836 | 228,245 | 168,507 | 130,664 | 133,573 | 210,419 | 185,774 | 139,755 | 154,297 | 204,921 | 273,206 |

### வெளிநாட்டவர்கள் நாட்டுக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணங்கள் :-

1. போலியான சுற்றுலாப் பயணியாக இருத்தல்.
2. போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தல்
3. முறையாக வீசாவைப் பெற்றிருக்காமல் இருத்தல் (வீசா வழங்க முடியாத நாடுகள் மற்றும் ஏனைய)
4. இதற்கு முன்னர் குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தை மீறியமைக்காக இந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டிருத்தல்.
5. கறை நிரல்படுத்தல்
6. இலத்திரனியல் பயண அங்கீகாரத்தைப்பெறாமல் இருத்தல். (No ETA)
7. போதிய பணம் இன்மை
8. மீளச் செல்வதற்கான விமானப் பயணச்சீட்டு இன்மை
9. சர்வதேச பொலிஸின் சிவப்பு எச்சரிக்கை
10. நீதிமன்றக் கட்டளை
11. குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் கட்டளை

### இலங்கைக்கு வெளியே (கூரியர்) கடவுச்சீட்டுகளை அனுப்புவதற்கான அனுமதி.

குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தின் பிரகாரம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடமிருந்து எழுத்துப்பூர்வ முன் அனுமதியின்றி கடவுச்சீட்டு வைத்திருப்பவர் மூலம் அன்றி தபால் மூலமாகவோ அல்லது வேறு வழியிலோ கடவுச்சீட்டை அனுப்புவது சட்டவிரோதமானது. அதற்கமைய இலங்கையில் தூதரகங்கள் இல்லாத நாடுகளுக்கு நுழைவதற்கு தேவையான விசாவைப் பெறுவதற்காக, இலங்கையில் தூதரகங்களைக் கொண்ட நாடுகளுக்கு கடவுச்சீட்டுக்களை அனுப்புவதற்கு இந்தத் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. (உதாரணம் கடவுச்சீட்டுக்கள் நியூசிலாந்து விசாவைப் பெறுவதற்காக இந்தியாவின் புது டில்லியில் உள்ள நியூசிலாந்து உயர் ஸ்தானிகராலயத்திற்கு அனுப்பப்படுகின்றன.)

அதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் 19334 கடவுச்சீட்டுகள் திணைக்களத்தின் அனுமதியின் கீழ் கூரியர் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. இதற்காக ஒவ்வொரு கடவுச்சீட்டிற்கும் ரூ. 1000.00 கட்டணம் அறவிடப்படுகின்றது. மேலும் 2019.07.01 ஆம் திகதி முதல் ரூ. 1150.00 தொகை அறவிடப்படுகின்றது. அதற்கமைய ரூ. 20,376,650.00 (ரூ. 20.37665 மில்லியன்) வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 2023 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம் வெளிநாடுகளுக்கு கூரியர் சேவை மூலம் கடவுச்சீட்டுக்களை அனுப்புவதற்கு ரூ.2,000/- அறவிடுவதற்கு முன்மொழியப்பட்டு 2022.11.17 ஆம் தகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2024 ஆம் ஆண்டில் கூரியர் செய்ய அனுமதிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை

| மாதம் | கூரியர் செய்யப்பட்ட அளவு | வருமானம் (அலகுப் பெறுமதி ரூ : 2,000.00) |
|---|---|---|
| ஜனவரி | 630 | 1,260,000 |
| பெப்ரவரி | 755 | 1,510,000 |
| மார்ச் | 992 | 1,984,000 |
| ஏப்ரல் | 936 | 1,872,000 |
| மே | 1110 | 2,220,000 |
| ஜூன் | 1006 | 2,012,000 |
| ஜூலை | 1219 | 2,438,000 |
| ஆகஸ்ட் | 1209 | 2,418,000 |
| செப்டம்பர் | 918 | 1,836,000 |
| ஒக்டோபர் | 612 | 1,224,000 |
| நவம்பர் | 762 | 1,524,000 |
| டிசம்பர் | 1030 | 2,060,000 |
| மொத்தம் | **11179** | **22,358,000** |

**கடவுச் சீட்டுக்களை கூரியர் செய்தல் மூலம் வருமானம் 2014 – 2024**

| வருடம் | கூரியர் செய்யப்பட்ட அளவு | வருமானம் (அலகுப் பெறுமதி ரூ:1000.00 / ரூ:1150.00 ரூ 2000.00) |
|---|---|---|
| 2014 | 26,286 | 26,286,000 |
| 2015 | 28,820 | 28,820,000 |
| 2016 | 30,676 | 30,676,000 |
| 2017 | 30,529 | 30,529,000 |
| 2018 | 26,718 | 26,718,000 |
| 2019 | 19,334 | 20,376,650 |
| 2020 | 2,422 | 2,785,300 |
| 2021 | 3,734 | 4,294,100 |
| 2022 | 8,803 | 11,060,150 |
| 2023 | 10,885 | 21,770,000 |
| 2024 | 11,179 | 22,358,000 |

**இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட துறைமுகமொன்றில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலொன்றின் பணியாட் தொகுதிக்கு தற்காலிகமாக தரைக்கு வருவதற்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல்.**

| துறைமுகம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்புத் துறைமுகம் | 86,102 | 91,122 | 86,753 | 88,158 | **61,664** | 68,844 | 6,941 | 28 | 7,614 | **21,185** | **45,357** |
| காலி துறைமுகம் | 1,696 | 2,177 | 2,269 | 1341 | 1,596 | 1,246 | 69 | 0 | 140 | **466** | **320** |
